பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

3ஆவது அகவையில் காலடி பதிக்கிறது புதுவிதி

புதுமை : 03 | 16 ஜுன் 2018 | விதி : 105



ஆட்டம்காணும் ஆதரவுத் தளம்



2050இல் கடலில் மீன்களை விட பிளாஸ்ரிக் அதிகம்



புதிய பிராமணர்கள்



அரியாலை

# வடமராட்சி கிழக்கில் நடப்பது என்ன?



'யாதும் ஊரே யாவரும் கேளிர்!!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமல்ஹாசனின் விஸ்வரூபம் 2 டிரைலர் வெளியாகியுள்ளது. படத்தை எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி வெளியிடத் திட்டமிட்டுள்ளார்கள்.

தமிழ், ஹிந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளியாகும் இந்தப் படத்தில் முதல் பாகத்தில் நடித்தவர்களே இரண்டாம் பாகத்திலும் நடித்துள்ளனர்.

# 2 Vishwaroop..II



தமிழில் 12 ஆண்டுகளாக வலம் வரும் தமன்னா எடுத்த முடிவால் அவரின் ரசிகர்கள் அதிர்ந்து போயுள்ளனர்.

"ஓய்வின்றி வந்த படங்கள் அனைத்தையும் ஒப்புக்கொண்டு நடித்தேன். இனி எனக்குப் பிடித்த படங்களில் மட்டுமே நடிப்பேன். எனக்கு ஓய்வு தேவைப்படுகிறது" எனக் கூறியுள்ளார்.



சமுத்திரக...
பெருவெற்ற...
இதன் இரண...
படப்பிடிப்...
இந்நிலை...
ஆம் பாகத்...
என சமுத்தி...
சமூகவலைத்...



இப்போது கோலிவுட்டில் நேரமின்றித் திரியும் நடிகைகளில் சாயீஷாவும் ஒருவர்.

இணையத்தில் இப்போது இவரின் நடனம் தான் மிகப் பிரபலம். 'சொடக்கு மேல...' பாடலுக்கு உடற்பயிற்சி கூடத்தில் இவர் ஆடி வெளியிட்ட வீடியோவுக்கு ரசிகர்கள் பெரும் வரவேற்புக் கொடுத்துள்ளனர்.

செல்வராகவன் இயக்கத்தில் உருவாகிவரும் 'என்.ஜி.கே.' படத்தின் படப்பிடிப்பு தளத்தில் சூர்யாவும் சாய் பல்லவியும் இருக்கும் புகைப்படம் வெளியாகியுள்ளது.

அதில், இருவரும் அரசியல்வாதிகள் பே... உடையணிந்திருப்பதால், இது அரசியல் படமோ என்ற கேள்வியும் ஆர்வமும் எழுந்துள்ளது.





யங் மங் சங், லட்சுமி படங்களில் நடிச்... பிரபுதேவா அடுத்து முகில் இயக்கத்தில் நடிக்கவுள்ளார்.

இதில் பொலிஸ் அதிகாரியாக பிரபுதே... நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக நிவேத... பெத்துராஜ் நடிக்கிறார். இவர்களுடன் இயக்குநர்கள் மகேந்திரன், சுரேஷ் மேன... ஆகியோரும் நடிக்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 02 | 16 ஜுன் 2018 | விதி : 105

# முதல்வர் சிறையிலடைக்கப்பட வேண்டும் பொங்குகிறது எதிர்க்கட்சிக் கூட்டணி

எதிர்க்கட்சிக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபய குணவர்த்தன வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை உடனடியாகக் கைதுசெய்து சிறையிலடைக்க வேண்டுமெனவும் அவரைக் கைது செய்யுமளவுக்குத் தற்போதைய அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இல்லை எனவும் பொங்கியெழுந்துள்ளார்.

வடக்கில் தனியார் காணிகள் உட்படப் பல பகுதிகளிலும் படையினர் குவிக்கப்பட்டு மக்களின் குடியிருப்புக்கள் மட்டுமின்றி விளைநிலங்கள், கடல் வளங்கள் என்பனவும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் ஏராளமான தமிழ் மக்கள் அகதி முகாம்களிலும் - உறவினர் வீடுகளிலும் தங்கி இன்னல்களை அனுபவிப்பதுடன் தமது



வாழ்வாதாரங்களையும் இழந்துள்ளனர்.

எனவே வடக்கில் இலட்சக் கணக்கில் குவிக்கப்பட்ட படையினரை ஒன்பது மாகாணங்களிலும் சம அளவில் பிரித்து நிலைநிறுத்த வேண்டுமென முதலமைச்சர் கேட்டிருந்தார். தனிநாடு அமைக்கும் நோக்கில் வடக்கிலிருந்து படையினரை வெளியேற்றவே முதலமைச்சர் இந்த ஆலோசனையை முன் வைத்ததாகவும், அது தேசத்துரோகம் எனவும், இதனால் முதல்வர் கைது செய்யப்படவேண்டுமெனவும் ரோஹித வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை- இன்றைய அரசாங்கம் தமிழ் மக்களின் வாக்குகள் தங்களுக்கு கிடைக்காமல் போய்விடும் என்பதற்காக முதல்வரைக் கைது செய்ய மாட்டார்கள் எனவும், அவர்களுக்கு முதுகில் எலும்பில்லையெனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

**அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்**

# வவுனியாவில் குளம்கட்டும் ஆளுநரின் அமைதிப்படை



அண்மையில் பலாலி படைத்தளத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே அவர்கள் வடக்கில் ஆயுதப் படையினர் பாதுகாப்புப் படையாகச் செயற்படுவதில்லை எனவும், அவர்கள் அமைதிப் படையாகவே செயற்பட்டு வருகின்றனர் எனக் கூறியுள்ளார். அதாவது வீடமைத்துக் கொடுத்தல், இடிக்கப்பட்ட இந்துக் கோவில்களுக்கு வர்ணம் பூசுதல் போன்ற சேவைகளைச் செய்து வருகின்றனர் என அவர்களின் சேவை பற்றிப் பாராட்டியுள்ளார்.


தற்சமயம் வவுனியாவிலுள்ள வேப்பங்குளம், ஈச்சங்குளம் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளும் படையினரிடமே அரச அதிபரால் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு ஒதுக்கப்பட்ட அரசநிதி படைத்தரப்பினருக்கே போய்ச் சேரும். வீடமைத்தல், குளம் கட்டுதல் போன்ற அபிவிருத்திப் பணிகள் தனியார் ஒப்பந்தகாரர்கள் மூலம் செய்யப்படும்போது தொழில்நுட்பவியலாளர்களின் கண்காணிப்பு உண்டு. இராணுவம் அவற்றை மேற்கொள்ளும்போது தொழில்நுட்பவியலாளர்கள் கண் காணிக்கவோ, சரியில்லாவிடில் நிராகரிக்கவோ முடியுமா? எனவே அபிவிருத்திகள் சிறிது காலத்தில் பழுதடைவது தவிர்க்க முடியாது.

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு ஏற்கனவே சிறப்பான வரலாறு உண்டு. பெண்களைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திவிட்டுக் கொன்று புதைத்தல், சிறுமியர் மீதான பாலியல் வன்புணர்வு, படுகொலைகள் என சில சிறப்புக்கள் உண்டு. ஹெயிட்டிக்கு அமைதிப்படையாகச் சென்று 13 வயதுக்கு உட்பட்ட சிறுமியரைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமைக்காக ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விரட்டப்பட்டமையை மறந்துவிடமுடியாது.

அமைதிப் படை என்றாலே மருத்துவமனைகளுக்குள் புகுந்து படுகொலைகளைச் செய்வது போன்ற அத்துமீறல்களைக் கொள்கையாகக் கொண்டதுதான் என்பதை எமக்கு ஏற்கனவே இந்திய அமைதிப்படை உணர்த்திவிட்டது! மீண்டும் ஒரு ஆளுநரின் அமைதிப்படையா??

**நாய் பார்க்கும் வேலையை கழுதை பார்த்[illegible]?**

# முஸ்லிம் விவகார அமைச்சராக கலகொட ஞானசார தேரர்



வெகு விரைவில் முஸ்லிம் விவகார அமைச்சராக கலகொட அத்த ஞானசார தேரர் நியமிக்கப்படவுள்ளதாகச் சில உறுதிப்படுத்தப்படாத செய்திகள் உலாவர ஆரம்பித்துள்ளன. ராவண பலய, சிஹல ராவய போன்ற அமைப்புகளும் மேற்படி நியமனத்துக்கு பலத்த ஆதரவை வழங்கவுள்ளன எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உருவ வழிபாட்டை முற்றாகவே நிராகரிக்கும் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் தனது மனைவிக்குத் தன்னில பாதியைக் கொடுத்த சிவபெருமானை முழு முதற் கடவுளாகக் கொண்டு உருவ வழிபாடு செய்துவரும் இந்து சமயத்தின் பிரதியமைச்சராக நியமனம் பெற்றுள்ளார். வித்தியாசமான வழிபாட்டு முறைகளையும், கொள்கைகளையும் கொண்ட இருவேறு மதத்தவரிடையே ஒரு மத விவகாரத்துக்கான அமைச்சராக மற்றைய மதத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டதையடுத்தே இந்த ஆலோசனை முன்வைக்கப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

கடந்த அரசாங்க காலத்தில ஊடகவியலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அஸ்வர் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அரேபியருக்கும், சிங்களப் பெண்களுக்கும் பிறந்த பிள்ளைகளின் வாரிசுகள் எனத் தெரிவித்திருந்தார். அது உண்மையானால் ஞானசார தேரர் முஸ்லிம் விவகார அமைச்சராக இருப்பதில் தவறில்லையெனக் கூறப்படவும் கூடும். லண்டனில் வளர்ந்து தற்போது கொழும்பில் வசிக்கும் அங்கஜன் இராமநாதனும் விவசாயப் பிரதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் மக்களின் விளை நிலங்களை அபகரித்து இராணுவத்தினர் விவசாயம் செய்யும்போது அவர் விவசாய அமைச்சராக இருப்பது பொருத்தமானதென்றே கருதப்படுகிறது. லண்டன் தேம்ஸ் நதி நீரைக் கப்பலில் கொண்டு வந்து வடக்கின் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய [illegible]க் கூடுமெனவும் சிலரால் எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்

கார் வைத்திருந்தால்
"ஆடம்பரமாக" வாழலாம்



மிதி வண்டி வைத்திருந்தால்
"ஆரோக்கியமாக" வாழலாம்

துரோகங்கள் நமக்கு
கற்றுக் கொடுப்பவை
ஒன்று தான்



சற்றே சுயநலமாய்
இருந்திருக்கலாம் என்று..




கவர்ச்சியில் வரும் காதல் எல்லாம்
காலபோக்கில் ஒழிவிடும்.
முழுமை பெற்ற காதல் தான் முதுமை
வரை கூடவரும்

கிராமத்துல CCTV
கேமரா




தெருவுக்கு ரெண்டு
இருக்கும்..!

புகழை மறந்தாலும்,
நீ பட்ட அவமானங்களை
மறக்காதே!!



அது இன்னொரு முறை நீ
அவமானபடாமல் காப்பாற்றும்..!

சரியா தான் பேரு
வச்சிருக்கானுங்க
வலைதளம்முன்னு...



சிக்கினா வெளியே
வரவே முடியல...

விருப்பத்தோடு
வாழ்பவர்களை விட,
விதி என்று



வாழ்பவர்களே இந்த
உலகில் அதிகம்...

கல்லை சிலையாக மாற்றும்
முன்
நீ "கல்" நான் "சிற்பி"



கல்லை சிலையாக மாற்றிய
பின் நீ "கடவுள்"
நான் "தீண்டத்தகாதவன்"

ஆணின் வாழ்வில்
நான்கு பெண்கள்
மிக முக்கியமானவர்கள்!



1.உன்னை பிறப்பித்தவள்
2.உன்னோடு பிறந்தவள்



3.உனக்காக பிறந்தவள்
4.உன்னால் பிறந்தவள்

ஆசையை கட்டுப்படுத்த புத்தனாக
பிறக்கத் தேவையில்லை.

நடுத்தர குடும்பத்தில் ஆணாக
பிறந்தலே போதுமானதாகிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய. பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

## பற்றுறுதியுடன் செயற்படுவோம்!

மூன்றாவது ஆண்டில் காலடி பதித்துள்ளோம். நிறைவடைந்த இரு ஆண்டுகளிலும் வாசகர்களாகிய நீங்கள் தந்த ஆதரவு தான் எமக்கான இயங்கு சக்தியாக இருந்தது. அந்த ஆதரவு தொடரும் - மேலும் அதிகரிக்கும் என்று நம்புகிறோம். இந்த நம்பிக்கையே எமது இயக்கம் - தொடர்ச்சி என்பதில் ஆழமான நம்பிக்கையைக் கொண்டுள்ளோம்.

"பத்திரிகை நடத்துவது என்பது நெருப்பாற்றை நீந்திக் கடப்பது போன்றது" என்று தினத்தந்தி நாளிதழின் நிறுவுநர் சி.பா. ஆதித்தனார் கூறினார். இன்று மக்களை பெரிதும் பாதித்துள்ள விலைவாசி உயர்வு எம்மையும் விடவில்லை. அச்சிடும் செய்தித் தாளின் விலை 45 வீதத்தால் அதிகரித்துள்ளது. எரிபொருள்களின் விலை உயர்வும் பத்திரிகை உற்பத்தியின் செலவை எகிறச் செய்துள்ளது.

நம் நாட்டுக்குள் வந்து எமது மக்களைக் கொன்று குவித்தவர்கள் - இறுதிப் போர் காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்படக் காரணமானவர்கள் எம்மிடம் எஞ்சி நிற்கும் போர்க்குணத்தை அழித்து விடக் கங்கணம் கட்டி நிற்கின்றனர். எமது போர்க்குணத்தை அழிப்பதன் மூலம் நாம் கொண்டுள்ள தமிழ்த் தேசியப் பற்றை அழித்து விடலாம் என்பதும் இதன் மூலம் தமது நாடு பாதுகாப்பாக இருக்கும் என்பதும் அவர்கள் கணக்கு. இதன் விளைவில் சாதி, சமயச் சிக்கல்களை உருவாக்கி விட்டுள்ளனர். முளைவிட்டுள்ள இந்த நச்சுக்கள் விஸ்வரூபம் எடுக்கும் முன்னர் நாம் - மக்கள் விழித்துக் கொள்வது அவசியம்.

கடந்த வாரம் விசுவமடுவில் நடந்த விவகாரம் பலரையும் - தமிழ்த் தேசியவாதிகளை - இளைஞர்களை கொதிப்படைய வைத்துள்ளது. இதன் விளைவே சமூக வலைத்தளங்களில் குவியும் விமர்சனங்களும் கண்டனங்களும். ஆனால் இந்த விடயத்துக்கு மூல காரணம் மக்களாகிய நாமும் - நம் அரசியல்தலைமைகளும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும்தான் என்பதை நம்மில் பலர் மறந்துவிட்டோம். கையறு நிலையில் நின்ற முன்னாள் போராளிகள், வேலை வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளை அரவணைக்கத் தவறியிருந்தோம்.

தமிழினத்தை அழித்தவர்களின் நிகழ்வுகளுக்கு ஆயிரக் கணக்கில் கோடி ரூபாய்களை அள்ளிக் கொடுப்பவர்கள், இந்தியாவில் திரைப்படங்கள் தயாரிப்புக்குப் பல நூறு கோடிகளை கொட்டுபவர்கள் சம்பாதித்தது இந்தத் தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் மக்களிடமே. எமது மக்களிடம் சம்பாதித்ததிலிருந்து சிறு துளியையேனும் இங்கு தொழிற்சாலைகள், தொழில் மையங்களை உருவாக்க செலவு செய்திருந்தால் இக்கீழ்மை நிலைக்கு நம்மவர்கள் தள்ளப்பட்டிருக்க மாட்டார்கள்.

தமிழ்த் தேசியத்தை ஆழமாகப் பற்றி நிற்கும் நாம் இதைத் தொடர்ந்தும் தக்கவைக்க - நம் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களை நாம்தான் மேலேற்றி விட வேண்டும். இதற்காகக் கடந்த காலங்களைப் போன்று நம் அரசியல் தலைமைகளிடம் பணத்தை அள்ளி வழங்கிவிடாமல் பொது அமைப்புகளை உருவாக்கி அல்லது நேரடியாக தொழில் மையங்களை அமைத்துச் செயற்பட வேண்டும். எமது பொருளாதாரம் - ஒரே இனமாக நிற்கும் கட்டமைப்பு என்பன நமக்கான உரிமைகளை நமக்குப் பெற்றுத் தரும். இதுவே தமிழர் தாகத்தைத் தணிக்கும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 06

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

மண்மூடை மட்டுமா? விதம் விதமான கனரக வாகனங்கள், குண்டுகள், கொத்துக் குண்டு, கிபீர் குண்டு, எத்தனை விதமான விமானங்கள் வன்னியின் வான் பரப்பில் பறந்து உயிர் குடித்து பறந்தன.

கிளிநொச்சி கனகபுரத்தில் பாடசாலைக்கு அருகில் கிபீர் விமானங்கள் போட்ட குண்டினால் முப்பதடிக்குள்ளாக தாண்டு வெடித்து கிணறு போல குழியுமாகி நீர் வந்திருந்தது. நவீன வடிவங்களில் தென்னங் குற்றிகள் பனங்குற்றிகளைப் போட்டு உயிர்காக்கப் போராடிய நிலை மாறிப் போயிருந்தது. பொருட்களோடு பொருட்களாக குற்றிகளை ஏற்றி இறக்கி காப்பிடல் வசதி செய்யும் வலுவை யாவரும் இழந்திருந்தனர்.

பகைப் பிராணி துரத்தும்போது தீக்கோழி மிக வேகமாக ஓடிச் சென்று இயலாக் கட்டத்தில் தலையை மண்ணுக்குள் புதைத்து தற்காப்பு தேடியதாக நினைத்து இரையாகுவது போல திறந்தவெளிப் பதுங்கு குழிகளின் மேல் ஒரு தரப்பாள் கூரை இருப்பதும் அந்த மறைப்புத் தரும் வல்லமையும் ஒருவித தற்காப்புக் கவசமான மனநிலைக்குள் மக்கள் வந்திருந்தார்கள்.

காலைப் புலர்வுக்கான அறிகுறிகள் மெல்லத் தோன்றத் தொடங்கின. ஆமிக்காரன் எழுந்து துப்பாக்கிகளையும் ஆட்லறிகளையும் உயிரூட்டும் முன்னர் காலைக் கடன் கழிப்பது உத்தமம். காலைக்கடன் கழிப்பதென்பது மிகவும் மோசமான நிலை. கடற்கரை எங்கும் நீண்ட நெடுஞ்சாலையாக மலக்கழிவுகளால் நிறைந்திருக்கும். கரை தட்டும் கடலலையில் மலக்கழிவுகள் மிதந்தடிக்கும். ஒருவரிருந்த மலத்தின் மேலேயே இன்னொருவர் இருக்கும் அவலநிலை. அந்தப் பிள்ளையார் கோவிலடிக்குப் பக்கத்தில் இருந்தவர்களோடு நன்கு பழக்கத்தை ஏற்படுத்தியமையால் அந்தத் துயரிலிருந்து தப்ப முடிந்தது. ஆனாலும் இறுதி நாட்களில் நந்திக்கடலோரம் நகர்ந்தபோது அந்தத் துயரை நாமும் அனுபவித்தோம்.

மாலையில் சேகரித்த நீரால் பிள்ளைகளையும் குளிக்க வைத்து நாங்களும் ஒரு காகக் குளியலைக் குளித்ததில் உடம்பு புத்துணர்வு பூசிக் கொண்டது. அதிகாலையே தறப்பாள்களை அவிழ்த்து மடித்து வட்டுவாகலுக்குப் போகத் தயாரானோம். தேநீரைப் பருகியது ஒரு உற்சாகத்தைத் தந்தது. சைக்கிளை உருட்டியபடி வீட்டுத்தலைவன் நகர குழந்தையை அணைத்தபடி நானும் பின் தொடர்ந்தேன். மகன் தந்தையின் தோள்களிலே குந்தி இருந்தான்.

நாங்கள் மட்டுமா? எங்களை முந்தி நிரை நிரையாக சனம் ஆமிக்கட்டுப்பாட்டுக்குள் போவதற்காக நகர்ந்து கொண்டிருந்தார்கள். அந்த வேளை தான் ஆமிக்காரன் கொத்துக் குண்டுகளையும் ஆட்லறித் தாக்குதலையும் செய்யத் தொடங்கினான். மண்ணோடு மண்ணாகப் படுத்திருந்தோம். எங்களுக்கு முன்னால் சற்றுத் தள்ளி ஒரு குண்டு வீழ்ந்து வெடித்தது. எங்கும் புகை இருள். முன்னால் நகர்ந்து சென்ற இரவு எங்களோடு கதைத்துச் சிரித்த ரதியக்காவும் அவர்களைச் சார்ந்தவர்களையும் காணவில்லை.


புகையிருள் விலகிய பொழுதில் இரத்தமும் தசையுமாய் நிலமும் பனை வடலிகளும் அப்பி நின்றன. கத்திக் குளறியபடி என் மகனைத் தேடினேன். "கத்தாதீங்க எங்களுக்கு ஒன்றுமில்லை" என்ற கணவரின் குரல் ஆறுதலைத் தந்தது. உடலெங்கும் மண்ணும் பறந்த உதிரங்களுமாய் தெறித்துக் கிடந்தன. பனை வடலிகள் கருகிய கோலத்தில் மனித தசைகளை அப்பி இருந்தன. முன்னே சென்ற ரதியக்காவை என் கண்கள் தேடின. ஒரு பனை வடலிக்குள் பந்து போல செருகிக் கிடந்தது ரதியக்காவின் தலை.

(சாட்சியம் நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ யோக நாராயணன்

# ஆட்டம் காணும் ஆதரவுத் தளம்



மருதங்கேணியில் தென்னிலங்கை மீனவர்கள் வாடி அமைத்து கடலட்டை தொழில் மேற்கொள்வது என்ற பெயரில் அப்பகுதிக் கடல் வளங்களை அழிப்பதை எதிர்த்து அப்பகுதி மீனவர்கள் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர். அதன் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் தமிழ் அரசுக் கட்சித் தலைவருமான மாவை சேனாதிராசா சென்றபோது போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

போராட்டம் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிரானதா? அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரானதா? என சந்தேகப்படுமளவுக்கு அங்கு குழப்பம் ஏற்பட்டது. எனவே மாவை சேனாதிராசா அவ்விடத்திலிருந்து வெளியேறிவிட்டார்.

சம்பந்தனுக்கு எதிராகவோ அல்லது சுமந்திரனுக்கு எதிராகவோ இப்படியான எதிர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் பெரிய ஆச்சரியம் ஏற்பட்டிருக்க முடியாது. ஆட்சி மாற்றத்தின் பின்பு அவர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியே நிலவிவந்தது. ஆனால் மாவை சேனாதிராசா தொடர்பாக அப்படியான வெறுப்பு இருப்பதாகத் தெரியவில்லை. எப்படியிருப்பினும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மாவை அந்த இடத்திலிருந்து வெளியேறிவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர் பாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைச் சேர்ந்த சிலர் கருத்து வெளியிடும்போது, போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஈ.பி.டி.பியினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு குழப்பம் என அபிப்பிராயம் வெளியிட்டனர். இது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாகத் தெரியவில்லை. இது ஈ.பி.டி.பியினரால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட குழப்பம் என்றால் போராட்டத்தில் கலந்துகொண்ட ஏனையோர் ஏன் அதைத் தடுக்கவில்லை? எனவே அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது!

அப்படி ஏற்றுக்கொள்வது உண்மையான காரணத்தைக் கண்டறிந்து, அதைத் திருத்தி மீண்டும் சரியான பாதையில் செல்லும் வாய்ப்பை இல்லாமற் செய்யும் ஆபத்துக்குள் தள்ளிவிடும். 2005 ஆம் ஆண்டின் பின்பு இடம்பெற்ற சகல நாடாளுமன்ற உள்ளூராட்சி, மாகாண சபைத் தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உச்ச பெரும்பான்மையைப் பெற்று தமிழ் மக்களின் ஒரே தலைமை என்ற பாத்திரத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டிருந்தது. ஆனால் அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என்ற ஸ்தானத்திலிருந்து சரிந்து விழுமளவுக்கு ஆதரவுத் தளம் ஆட்டம் கண்டுவிட்டது.

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் பின்பு இரா. சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன் ஆகியோரின் நடவடிக்கைகள் திருப்தியளிக்கும் வகையில் இருக்கவில்லை. இவற்றின் காரணமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடையே, இடையிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டபோதும் அவை பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால், த.தே.கூட்டமைப்புக்குள் தமிழ் அரசுக் கட்சியின் மேலாண்மை என்ற பேரில் இந்த இருவருமே தான்தோன்றித்தனமாக முடிவுகளை எடுத்துச் செயற்படும் நிலை உள்ளூர வளர்ச்சி பெற்றுக்கொண்டே வந்தது.

2015ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றை அடுத்துப் புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்றது. தமிழ் மக்களும் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வாக்களித்தனர்.

இதன்பின்பு த.தே.கூட்டமைப்பு இணைந்த அரசியல் என்ற போர்வையில் ஒரு சரணாகதி அரசியலை நோக்கி நகர ஆரம்பித்தது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுப்பதற்குப் பதிலாக அரசாங்கத்தின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளை தமிழ் மக்கள் மத்தியில் நியாயப்படுத்தும் ஒரு போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தது.

இந்த நிலையில் மக்கள் தாங்களாகவே இறங்கித் தங்கள் பிரச்சினைகளுக்கான போராட்டங்களை ஆரம்பித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணிவிடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் போன்ற விடயங்களின் மக்கள் நடத்திய போராட்டங்களுக்கு ஆக்கபூர்வமான ஆதரவு வழங்கவில்லை.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் அந்தப் போராட்டங்களை ஒன்றிணைத்து - வலிமைப்படுத்தி - அதன் சக்தியைக் கொண்டு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து, மக்களின் கோரிக்கைகள் வெற்றிபெற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பாடுபட்டிருக்கவேண்டும். இந்தப் போராட்டங்களை தொடர்பாக அவர்கள் காட்டிய அலட்சியபோக்கு அவர்கள் மேலான நம்பிக்கையை இல்லாமற் செய்வதில் பெரும் பங்கை வகித்தது என்பதை மறந்துவிடமுடியாது.

அதன் பிரதிபலனே கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் இரண்டே இரண்டு சபைகளைவிட வேறு எந்தச் சபையிலும் ஆட்சியமைக்குமளவுக்கு பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. உடனடியாகவே தமது தோல்வியின் காரணத்தைப் புரிந்து கொண்டு அதைச் சரிசெய்து அடுத்த கட்ட நகர்வை மேற்கொண்டிருக்கவேண்டும். ஆனால், கூட்டமைப்பினரோ தங்கள் தோல்விக்குத் தேர்தல் முறையே காரணம் எனக்கூறிக் கொண்டு, உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்ற மேற்கொண்ட நடவடிக்கை மேலும் அவர்கள் மேல் நம்பிக்கையிழக்கும் நிலைமையையே ஏற்படுத்தியது.

அதுதான் ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் பல சபைகளின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியமையாகும்.

தலைமையின் போக்கு எப்படியிருந்தபோதிலும், நீண்டகாலமாகத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் என்ற வகையிலும், போராட்டங்களில் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்றவர் என்ற முறையிலும் மாவை சேனாதிராசாவுக்கு மக்கள் மத்தியில் ஒரு மதிப்பு இருந்தது. ஆனால் அவர் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆதரவு கோரியதன் மூலம் தனக்கு மக்கள் மத்தியில் இருந்த நம்பிக்கையையும், நன் மதிப்பையும் கவிழ்த்துக் கொட்டிவிட்டார்.

இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் ஒரு தவறால் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து விடுபட இன்னொரு தவறு கையிலெடுக்கப்பட்டது. அதன் பல தவறுகள் மலையாகக் குவிந்து அவர்களையே அமுக்கும் நிலை உருவாகிவிட்டது. ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்போகிறோம், போராட்டம் நடத்தப் போகிறோம், சர்வதேசத்திடம் முறையிடுவோம் போன்ற வீரவசனங்கள்கூடச் செல்லுபடியாகதளவுக்கு, கடந்தகால சரணாகதி அரசியல் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்கமுடியாது.

மக்கள் தாங்கமுடியாத நிலையில் பொறுமையிழந்து போராட்டங்களில் இறங்கியபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்டிய இலட்சியப் போக்குக் காரணமாக அங்கு உருவாகிய வெற்றிடத்தை அரச சார்பற்ற நிறுவனங்களும், வேறு அரசியல் சக்திகளும் நிரப்பிக்கொண்டன. அதன் காரணமாக அரசாங்கத்துக்கும் சமாந்தரமாக த.தே.கூட்டமைப்புக்கும் மக்கள் மத்தியில் வெறுப்பும், அதிருப்தியும் ஏற்படுத்திவிட்டன.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவுத் தளம் ஆட்டம் காண்பதைத் தடுத்து நிறுத்துவதைத் தடுத்து நிறுத்த தனது அசமந்தப் போக்கை மாற்றி சரியான - நேர்மையான பாதையில் இறங்கவேண்டும். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியாகத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் முன் செல்லவும், தமிழ் மக்களின் ஐக்கியம் ஒரே தலைமையில் வெளிப்படவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இருப்பு அவசியமாகும். எனவே தீய சக்திகளைக் களைந்து ஐக்கியப்படக்கூடிய சக்திகளுடன் ஐக்கியப்பட்டு முன் செல்ல வேண்டும். பதவிகளுக்காகத் துரோகிகளுடன் ஐக்கியப்படும் கயமை உடனடியாகக் கைவிடப்பட்டு, இலட்சியத்தை இறுகப்பற்றி முன் செல்லவேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலவன்

# புகைப்பதை விடுங்கள் 10 ஆண்டுகள் ஆயுள் கூடும்



இலங்கையில் 15 இலட்சம் பேர் தினமும் புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். நாட்டின் மொத்த மக்கள் தொகையில், 15 சதவிகிதம் பேர் புகையிலையைப் பயன்படுத்துகின்றனர். தினமும் ஒரு கோடியே 10 இலட்சம் சிகரெட்கள் விற்பனையாகின்றன

'புகைபிடிக்கும் ஒருவர், ஒருமுறை புகைபிடிக்கும்போது தன்னுடைய வாழ்நாளில் ஐந்து நிமிடத்தை இழக்கிறார். வாழ்நாள் முழுவதும் புகைபிடித்துக் கொண்டே இருப்பவர் தன்னுடைய ஆயுட்காலத்தில் 10 முதல் 11 ஆண்டுகளை இழந்து விடுகிறார்' என்கிறது உலக சுகாதார அமைப்பு.

'உலகம் முழுவதும் புகையிலையால் ஒவ்வொரு 8 வினாடிக்கும் ஒருவர் உயிரிழக்கிறார்' என்கிறது அந்த அமைப்பின் அறிக்கை. புகையிலை உபயோகத்தைக் கட்டுப்படுத்தவும் அதனால் ஏற்படும் உயிரிழப்பைத் தடுக்கவும் விழிப்பு உணர்வு ஏற்படுத்தவும் 1987 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி 'உலக புகையிலை எதிர்ப்பு தினம்' ஆக அறிவிக்கப்பட்டது. அந்த நாளில், புகையிலை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி பல்வேறு விழிப்பு உணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

உலகம் முழுவதும் 110 கோடி பேர் புகைப்பிடிக்கின்றனர். இதில் 50 வீதமானோர் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு, உயிரிழக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும், உலகம் முழுவதும் 71 இலட்சம் பேர் புகையிலை பயன்படுத்துவதால் மட்டுமே உயிரிழக்கின்றனர். இதில் ஏறத்தாழ 9 இலட்சம் பேர், புகைப்பவரின் அருகிலிருப்பதால் பாதிக்கப்பட்டவர்கள். சாதாரணமாக 51 லட்சம் ஆண்களும், 20 லட்சம் பெண்களும் புகைக்கு அடிமையாகி, உயிரிழக்கிறார்கள்.

இலங்கையில் 15 இலட்சம் பேர் தினமும் புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். நாட்டின் மொத்த மக்கள் தொகையில், 15 சதவிகிதம் பேர் புகையிலையைப் பயன்படுத்துகின்றனர். தினமும் ஒரு கோடியே 10 இலட்சம் சிகரெட்கள் விற்பனையாகின்றன. இது நாட்டின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அரைவாசிக்கு சமனாகும்.

புகையிலையில் கலந்துள்ள நிகொற்றின் பற்றி பலரும் அறிவோம். ஆனால், காபநீர் ஒட்சைட், ஆர்சனிக் , ஐதரசன் சயனைட், நப்தலின், கந்தகம், ஈயம் போன்ற உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் 4,000இற்கும் அதிகமான இரசாயனங்கள் அதில் கலந்துள்ளன. இதில், 69 வகை இரசாயனங்கள் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியவை.

ஒருவர் புகைப்பிடிக்கும்போது, உள்ளே இழுக்கும் புகையைவிட வெளியே விடும் புகையே அதிகம். இரண்டிலுமே நிகொற்றின் (nicotine), காட்டினின் (Cotinine), தியோசயனைட் (Thiocyanate), பென்சீன்(benzine) போன்ற நச்சுப் பொருள்கள் ஏராளமாக உள்ளன. இவையும் புற்றுநோய்க்கு வழிவகுக்கும். உங்களுக்குப் புகைப்பிடிக்கும் பழக்கம் இருந்தால், வீட்டில் உள்ளவர்களுக்கும் கண்டிப்பாக பாதிப்பு ஏற்படும்.

'புகைப்பிடிப்பதால், கண், மூளை, முடி, மூக்கு, பல், வாய், தொண்டை, காது, நுரையீரல், இதயம், மார்பு, வயிறு, கல்லீரல், சிறுநீர்ப்பை, கைகள், தோல், எலும்புகள், முழங்கால், தசை, இரத்த நாளங்கள் போன்ற அனைத்து உறுப்புகளும் பாதிக்கப்படும்" என்று உலக சுகாதார அமைப்பு கூறுகிறது. ஒரே நேரத்தில் 30 மி.கி. முதல் 60 மி.கி. அளவிலான நிகோற்றின் ஒருவருடைய உடலுக்குள் சென்றால், அவருக்கு மரணம்கூட நேரலாம். ஒரு சிகரெட்டில் 12 மி.கி. நிகோற்றின் உள்ளது.

தொடர்ந்து புகைப்பிடிக்கும் ஐந்து ஆண்களில், ஒருவர் மனதளவில் பாதிக்கப்படுகிறார். சிகரெட் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 10 பெண்களில் ஏழு பேர் பல்வேறு விதமான நோய்களுக்கும், மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர்.

எச்.ஐ.வி, காசநோய், வாகன விபத்துகள், தற்கொலைகள், கொலைகள் போன்றவற்றால் ஏற்படும் மரணத்தைவிடப் புகையிலையால் ஏற்படும் உயிரிழப்புகளே அதிகம்.

'புகைப்பிடிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து, 1950ஆம் ஆண்டிலிருந்தே மருத்துவர்களும் ஆராய்ச்சியாளர்களும் மக்களுக்கு விளக்கிக்கொண்டுதான் இருக்கின்றனர். அதனுடைய விளைவுகள் பற்றி தெரிந்தாலும், புகைப்பதை பெரும்பாலானோர் கைவிடுவதில்லை. அதனால்தான், பெரும்பாலான உயிர்கள் பறிபோகின்றன, புற்றுநோய்க்கு முதல் காரணமாக இருப்பது புகையிலைதான். மனிதர்களின் உயிரைப் பறிப்பதில் இரண்டாம் இடம் வகிக்கிறது புகையிலைப் பயன்பாடு.

புகைக்க ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே, அதிலுள்ள நிகோற்றின் உள்ளிட்ட இரசாயனங்கள் மூளைக்குச் செல்லும். அதனால், சாந்தமாகவும் புத்திக்கூர்மையுடனும் இருப்பதுபோல, நமக்குத் தோன்றும். நாளாக, நாளாக இயல்பாக இருப்பதற்கே புகைக்க வேண்டிய அபாயம் உருவாகும். தொடக்கத்தில், நாளொன்றுக்கு ஒரு சிகரெட் பயன்படுத்தும் ஒருவர் நாளடைவில் பத்து சிகரெட் புகைக்கத் தொடங்கிவிடுவார். சிகரெட், புகையிலை, பான், மாவா உள்ளிட்ட அனைத்துப் போதைப்பழக்கங்களுக்கும் வாய்தான் பிரதானம். இதனால்தான் புகையிலைப் பயன்படுத்துவோரில் 90 விழுக்காட்டினருக்கு வாய்ப்புற்றுநோய் ஏற்படுகிறது.

புகையிலை மெல்லும்போது, சிகரெட் புகைப்பதைவிட மூன்று மடங்கு அதிகமாக நிகோற்றின் நம் உடலில் கலக்கிறது. இதனால், கன்னம், நாக்கு, உணவுக்குழாய், சுவாசக்குழாய் உள்ளிட்ட இடங்களில் வெள்ளைத் திட்டுக்கள் உருவாகி, நாளடைவில் புற்றுநோயாக உருவெடுக்கும். அதுமட்டுமின்றி, சொரியாஸிஸ், கண்புரை நோய், தோல் சுருக்கம், காது கேளாமை, பற்சிதைவு, சுவாசக்குழாய் அடைப்பு, எலும்புப்புரை நோய், இதயநோய், வயிற்றுப்புண்கள், விரல்கள் நிறமாற்றம், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் மற்றும் கருச்சிதைவு, ஆண்மைக் குறைவு, பியூ ஜெர்ஸின் நோய் உள்ளிட்டவை ஏற்படும். புகைப்பவருக்கு நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்துபோய், விரைவாக அவர் மரணத்தைக் கூட தழுவலாம்.

புகைப்பவர்கள் பெரும்பாலும் சொல்வது, 'கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிடுவேன்' என்பதுதான். ஒரு நிமிடத்துக்குள் ஆரம்பித்த புகைப்பழக்கத்தை ஒரே நொடியில் விட்டுவிட வைராக்கியம் தேவை. அதுதான் சிகரெட்டிலிருந்து விடுபட முதல்படி. சிகரெட்டினால் சீரழிந்திருக்கும் நம்முடைய உடலை யோகா, நடைப்பயிற்சி,

(18ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

- வல்வை ரவி -

தொடர் 41

# அரியாலை

வட பிராந்தியத்திலுள்ள முக்கிய இடங்களுள் அரியாலையும் ஒன்றெனலாம். அரியாலை யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி வீதியில் ஏறத்தாழ 4 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இடமாகும். (நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில், யாழ்ப்பாண மாநகர சபையில் ஒரு பிரிவாக அரியாலை அமைந்துள்ளது.)

இந்தப் பகுதியில் முன்னொரு காலத்தில் மர அரிவு ஆலைகள் பல காணப்பட்டதாலேயே இந்தப் பகுதி அரியாலை என்றழைக்கப் பட்டது. தொடர்ச்சியாக இன்றும் மரம் அரியும் ஆலைகள் சில அரியாலையிற் காணப்படுகின்றன. எனவே தொழிலை அடிப்படையாகக் கொண்ட ஆலை ஈற்றுப் பெயராக இவ்வூர் ஆக்கம் பெற்றுள்ளது.

இவ்வூருக்கு அரியாலை என்ற பெயர்வந்த பின்னணி தொடர்பில் பலரும் பலவாறாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அரி + ஆலயம் = அரியாலை என வழங்கிற்று என்பர். தொடக்கத்தில் இங்கு விஷ்ணு ஆலயம் இருந்திருக்குமா? என ஆராய்தல் பயன்தருவதாகும். அரியாலை முனையிலுள்ள கோயிலிலிருந்தே இந்த ஊர்ப் பெயர் பிறந்தது என்பதைப் பலர் ஏற்றுக்கொள்கின்றனர். கொழும்புத்துறைக் கடலும் அரியாலைக் கடலும் இணையும் அரியாலை முனைக்கு அருகாமையில் பழைமை மிக்க பிள்ளையார் கோவிலொன்றுண்டு.

இக் கோவில் கருவறையில் இப்பொழுது விக்னேஸ்வரனின் கற்சிலையும், வடமேற்கு முனையிலுள்ள சிறு கோயிலில் விஷ்ணு சிலையும் இருக்கின்றன. ஆனால் சில காலத்துக்கு முன்பு கருவறையில் விஷ்ணுவின் உருவச் சிலையே இருந்தது. வைஷ்ணவம் அருகி சைவம் தலையெடுத்தால் இவ்வித மாற்றம் ஏற்பட்டது என 22-06-1959 திகதியிட்ட தினகரனில் செய்தி வெளிவந்திருந்தமை நோக்கப்பாலது.

விஷ்ணுவுக்கு ஹரி, அரி என்ற பெயருண்டு. இங்கு விஷ்ணு ஆலயம் இருந்தமையால் இந்த இடம் அரி ஆலயம் என்று முதலில் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். புணர்ச்சி இலக்கண விதிப்படி



அரி+ஆலயம் = அரியாலயம் ஆக வழங்கி காலப்போக்கில் அரியாலையம் எனத் திரிபடைந்து பின்பு பேச்சு வழக்கில் சொல்லின் இறுதியுள்ள “அம்” மறைந்து அரியாலை என்றாயிற்று என்பர்.

இங்கு கல்வி வழங்கும் முக்கிய மையங்களாக கனகரத்தினம் மகா வித்தியாலயம், ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், விக்னேஸ்வரா இந்து மகா வித்தியாலயம், கிழக்கு அரியாலை ஆரம்பப் பாடசாலை என காணப்படுகின்றன. அதே கணம் பல சனசமூக நிலையங்களும் சமூக, கல்வி சேவையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

அரியாலை கிழக்கு ஐயனார் கோயிலமைந்துள்ள இந்தப் பகுதியில் பூம்புகார் என்ற பெயருடைய குடியிருப்புத் திட்டம் 1977 இல் இடம்பெற்ற தமிழ், சிங்கள இனக் கலவரத்தையடுத்து அமைக்கப்பட்டது.

இவ்விடத்தில் பழமையைக் குறிக்கும் மட்பாண்ட ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த மண் ஓடுகள் கிறிஸ்துவின் தொடக்க கால நூற்றாண்டைக் குறிக்குமென ஆய்வாளர் இரகுபதி கருதியுள்ளார்.

அரியாலையில் நாணயங்கள், மட்பாண்ட ஓடுகள், தூண்கள், நடக்கக் கூடிய துவாரமிடப்பட்ட கற்பாறைகள் முதலிய புதை பொருட் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் அரியாலையின் பண்பாட்டை பறைசாற்றுகின்றன.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

## மேடம்
திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். உறவினர்களிடமிருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனத்தால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும்.

## ரிஷபம்
அக்கம் பக்கத்தினரின் அன்பும் பாராட்டும் கிடைக்கும். செயல்களில் நேர்த்தி உருவாகும். உடன் பிறந்தவருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். வாகனத்தில் பூர்வ சொத்தில் மிதமான வருமானம் இருக்கும். பிள்ளைகள் ஆக்கபூர்வமாக செயல்பட்டு முன்னேறுவர்.

## மிதுனம்
நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சமூக நிழ்வுகளால் மனதில் நல்ல மாற்றம் உருவாகும். வீடு, வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் மனதில் ஆன்மிக எண்ணம் வளரும். படிப்பு, வேலையிலும் முன்னேறுவர்.

## கடகம்
பணிகளில் சுறுசுறுப்பும் நேர்த்தியும் உருவாகும். வெளியூர் பயணத்தால் ஓரளவு நன்மை கிடைக்கும். ஆவணங்களை பிறர் பொறுப்பில் கொடுக்கக்கூடாது. கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். தொழிலில் இடையூறுகளைத் தாமதமின்றி சரி செய்தால் வளர்ச்சி அதிகரிக்கும்.

## சிம்மம்
மனதின் உற்சாகம் செயலில் வெளிப்படும். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். பொதுநலப் பணிகளில் புரிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தாய்வழி உறவினர்கள் உதவுவர். வெளியூர் பயணம் மூலம் இனிய அனுபவம் தரும். பிள்ளைகள் சில விஷயங்களில் பிடிவாதக் குணத்துடன் செயல்படுவர்.

## கன்னி
நினைத்த செயல்கள் சிறப்பாக நிறைவேறும். பணப் பரிவர்த்தனை சிறப்பாக இருக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. பிள்ளைகள் பெருமை சேர்ப்பர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள்.

## துலாம்
ஆன்மிகக் கருத்து மிகுந்திருக்கும். மனதில் தைரியம் மேலோங்கும். உடன் பிறந்தவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்தால் ஆதாயம் அடைவீர்கள். பிள்ளைகளைப் படிப்பு, செயல்திறனில் முன்னேற்றுவீர்கள்.

## விருச்சிகம்
நண்பரால் உதவி உண்டாகும். மனதில் தைரியம் மேலோங்கும். திட்டமிட்ட பணி இஷ்ட தெய்வ அருளால் நிறைவேறும். அன்றாட வாழ்வு சிறப்பாகும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நோய் தொந்தரவு குறையும்.

## தனுசு
மனதில் உத்வேகமும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். குடும்பத்தில் சுபநிகழ்வு உண்டாகும். பிள்ளைகளின் விருப்பங்களை பணவசதிக்கேற்ப நிறைவேற்றுவீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். எதிர்கால தேவை கருதி சேமிப்பது நல்லது.

## மகரம்
புதிய யுக்தியுடன் பணிகளை துவங்குவீர்கள். சமூக நிகழ்வுகளால் இனிய அனுபவம் உண்டாகும். உறவினர்களிடமிருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். ஆரோக்கியம் பலம் பெறும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

## கும்பம்
வியத்தகு அளவில் நன்மை சேரும். உடன்பிறந்தவர்களை விமர்சிக்க வேண்டாம். புதிய வீடு, வாகனம் என்பனவற்றை விரும்பியபடி வாங்கலாம். பிள்ளைகள் பெற்றோருக்கு பெருமை தேடித் தருவர். இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

## மீனம்
அன்புக்குரியவரின் ஆலோசனை உற்சாகம் தரும். மனதில் தெளிந்த சிந்தனை பிறக்கும். வெளியூர் பயணத்தால் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகள் சொல் கேட்டு நல்வழியில் நடப்பர். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும்.



வவுனியா சதுரங்க சம்மேளனத்தால் கடந்த மாதம் நடத்தப்பட்ட சதுரங்கச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா அண்மையில் வவுனியா நெல்லி ஹோட்டலில் நடைபெற்றது.




திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கான கூட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கின்ற நிலையில் அதற்கெதிரான போராட்டம் திருகோணமலை - கண்டி வீதியிலுள்ள இந்து கலாசார மண்டபத்திற்கு முன்னால் நடைபெற்றது.



பிரான்ஸ் பல்கலைக் கழகப் பொறியியல் பீட மாணவர்கள் IOSF (Isnstitu D optique sans frontieres) என்ற மனிதநேய அமைப்பை உருவாக்கச் சேவைகளை முன்னெடுத்து வருகின்றனர். தற்போது இலங்கையின் வடக்குக் கிழக்கில் உள்ள போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைச் சந்தித்தனர்.



பாலா ஐயாவின் நிதி பங்களிப்புடன் மடு பிரதேசத்தில் உள்ள பூசாரியார் குளம் , முள்ளிக் குளம் போன்ற பிரதேசங்களில் மிகவும் வறிய நிலையில் உள்ள விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கு தேவையான உணவு பொதி வெளிச்சம் அறக்கட்டளை ஊடாக வழங்கி வைக்கப்பட்டது.





யாழ். வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்ட மீனவர்கள் தங்கியிருந்து கடலட்டை பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளத்தால் மாபெரும் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.



முல்லைத்தீவு சுதந்திரபுரம் படுகொலை கடந்த 4ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈசாப் நீதிக் கதைகள்

# கழுதையின் தந்திரம்


ஒரு வியாபாரி உப்பு வாங்குவதற்காகத் தன் கழுதையைக் கடற்கரைக்கு ஓட்டிச் சென்றார். போகிற வழியில் ஓர் ஓடை இருந்தது. திரும்பி வரும்போது கால்தவறிக் கழுதை ஓடையில் விழுந்தது. தண்ணீரில் உப்பு கரைந்து போனதால், கழுதை எழுந்தபோது சுமையின் கனம் மிகவும் குறைந்திருந்தது.

வியாபாரி திரும்பிப்போய், இன்னும் கூடுதலாக உப்பைத் தனது கோணிகளில் நிரப்பிக் கொண்டான். வேண்டுமென்றே கழுதை மீண்டும் விழுந்து தனது பாரத்தைக் குறைத்துக் கொண்டது. எனவே அது வெற்றிகரமாகக் கனைத்தது.

வியாபாரிக்குக் கழுதையின் தந்திரம் புரிந்துபோகவே, மூன்றாம் முறையாக கடற்கரைக்கு அதை ஓட்டிச் சென்றான். அங்கே உப்புக்கு பதிலாகக் கடற்பஞ்சு மூட்டைகளை வாங்கினான். ஓடையை அடைந்ததும், மீண்டும் அதே தந்திரத்தைக் கழுதை செய்தது.

ஆனால் கடற்பஞ்சு தண்ணீரை உறிஞ்சிக் கொண்டு மிகவும் கனத்துப் போனது. ஆனால் கழுதைக்கு எழுந்து நடக்கமுடியாமல் போனது.

# அறிந்து கொள்வோமே!



சூரியக் குடும்பத்தில் அணிகலன் என அழைக்கப்படும் சனிக்கோளின் வளையங்களை 1610 ஆம் ஆண்டு முதன்முதலில் டெலஸ்கோப் மூலம் கண்டுபிடித்தவர் கலிலியோ கலிலி. 1675 ஆம் ஆண்டு இதில் வளையங்களுக்கிடையேயான அடுக்குகளை கண்டறிந்தவர், ஜியோவனி டொமனிகோ.

1979 செப்டெம்பரில் பயனீர் 11, 20,900 கி.மீ அளவில் சனியின் கு வளையத்தை ஆய்வு செய்தது. 1980 நவம்பரில் வாயேஜர் 1 (64,200 கி.மீ பு வளையம்), 1981 ஓகஸ்டில் வாயேஜர் 2(41,000 கி.மீ) அருகில் சென்று சனியின் வளையங்களின் அதிதுல்லிய படங்களை எடுத்தது.

தற்போது நாம் பார்க்கும் சனிக்கோளின் படங்கள் கேசினி ஆராய்ச்சி விண்கலம் எடுத்தவையே. சனியைச்சுற்றியுள்ள வளையங்களின் நீளம் 2 கி.மீ. அதிகமானவையும் உண்டு. வளையங்களில் உறைந்த பனிக்கட்டி, பாறைத்துகள்கள் உள்ளன. வளையங்கள் 14 துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

# கேள்விக்கு என்ன பதில்?



1. மனித உடலின் மிகப்பெரிய சுரப்பி எது?
2. கர்ணனுடன் தொடர்புடைய ஆபரணம் எது?
3. மலேசிய பணத்தின் பெயர் என்ன?
4. சூரியனின் வயது என்ன?
5. உழவனின் நண்பன் என்று அழைக்கப்படுவது எது?





# விடுகதைகள்



1. கடையெழுத்து மாறிடில் தின்னலாம், முதலும் கடையும் சேர்ந்தால் குளிரும், மொத்தத்தில் முருகன் இடம். தெரிந்தவர் சொல்லுங்கள் ?
2. அள்ள முடியும், ஆனால் கிள்ள முடியாது அது என்ன?
3. அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி, பாதிநாள் குறைவாள், பாதிநாள் வளர்வாள் அது என்ன?
4. பாலாற்றின் நடுவே கறுப்பு மீன் தெரியுது அது என்ன?



# பூக்களைப் பறிக்காதீர்

அழகுமிகு ரோஜா செடி அருகில் இருந்ததாம்
செடிகள் நிறைய பூக்கள் மலர்ந்து இருந்ததாம்
கண்ணைக் கவரும் வண்ணம் பல இருந்ததாம்
காண்போர் மனதில் மகிழ்ச்சி இருந்ததாம்.

இரகசியமாய் சிலர் மலர் பறிக்க நினைத்தனரே
இதைக் கைகள் கொண்டே செய்து பார்த்தனரே
செடியின் முட்கள் கைகளில் குத்தி வலித்ததுவே
சென்ற வேகத்தில் ஓடியே மறைந்தனரே!.

பார்த்து ரசிக்கவே பூக்கள் மலர்கின்றன
பறித்து எறிய பூப்பதில்லை அறிந்திடுவீர்
அழகாய் இருப்பதை ஆசையோடு ரசித்திடுவோம்
அவசியமின்றி பறிப்பதை அறவே விலக்கிடுவோம்

இரு படங்களுக்கிடையேயும் ஆறு வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்களேன்.



# அதிசய உடம்பின் தோல்


பொதுவாகவே, நம் எல்லோருக்கும் அடிக்கடி தோல் உரியும். நம் வாழ்நாள் முழுவதும், உடம்பில் இருந்து மொத்தமாக எவ்வளவு தோல் உரியும் என்று தெரியுமா? வாழ்நாள் முழுவதும் நம் உடம்பில இருந்து உரிந்து விழும் தோலின் எடை கிட்டத்தட்ட 18 கிலோ.



எமது உடம்பிலேயே அதிக நீளமான உறுப்பு எது தெரியுமா..?? தோல்தான். நன்கு வளர்ந்த ஆணின் தோலை முழுதாக நீட்டி அளந்தால் 20 சதுர அடிக்கு வருமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000 வருடம் பழைமையான பிரம்மா கோயில்



படைக்கும் கடவுளெனப் போற்றப்படும் பிரம்மாவுக்கு என தனிக் கோயில்கள் மிகச் சிலவே உள்ளன. இவற்றில் முக்கியமானது இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் ஆஜ்மீர் மாவட்டம் புஷ்கர் பிரம்மா கோயில்.

விசுவாமித்திர மகரிஷியால் ஏற்படுத்தப்பட்ட புஷ்கர் பிரம்மா கோயில், சுமார் 2,000 வருடங்கள் பழைமையானது. இப்போதிருக்கும் ஆலயம் 14ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்கிறார்கள். இந்தியாவில் பிரபலமான இந்தக் கோயில் புஷ்கர் நகரின், 'புஷ்கரணி' எனும் புனித குளத்தின் அருகே அமைந்துள்ளது. புஷ்கர் என்றால் 'நீலத் தாமரை' என்று பொருள்.

பத்ம புராணக் கதையின்படி, வஜ்ரனபா என்ற அசுரனை தனது தாமரை மலரால் பிரம்மா வதம் செய்தார். அப்போது அவரது தாமரை மலரிலிருந்து விழுந்த இதழ்கள் புஷ்கர் ஏரி, மத்திய புஷ்கர் ஏரி, கனிஷ்ட புஷ்கர் ஏரி என்ற மூன்று தீர்த்தங்களை உருவாக்கியது. புனிதமிக்க புஷ்கர் பகுதியில் நான்முகன் உலக நன்மைக்காக ஒரு யாகம் செய்ய ஆரம்பித்தார். யாகத்தை கொடியவர்களிடமிருந்து காக்க வடக்கில் நீலகிரி மலை, தெற்கில் ரத்னகிரி மலை, கிழக்கில் சூர்யகிரி மலை, மேற்கில் சோன்சூர் மலைகளை அரண்களாகக்கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தார். இந்த மலைகளின் மீது அஷ்டதிக் பாலர்களைக் காவலாகவும் வைத்தார். யாகம் செவ்வனே நடந்துவந்தது.

யாகத்தில் பிரம்மாவின் மனைவியான சரஸ்வதிதேவி ஆஹூதி தரவேண்டியவேளை வந்தது. ஆனால், அங்கே சரஸ்வதிதேவி இல்லை. தோழியர்களை அழைத்துவரச் சென்றிருப்பதாகச் சொல்லப்பட்டது. இதனால் யாகம் தடைப்படக் கூடாது என்று கருதிய பிரம்மா அங்கிருந்த 'குஜ்ஜர்' இனத்தைச் சேர்ந்த காயத்ரியை மணமுடித்து யாகத்தை நிறைவுசெய்தார். பின்னர் அங்கு வந்த சரஸ்வதிதேவி வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொண்ட பிரம்மாவைக் கண்டு கோபமாகி 'பிரம்மனுக்கு வேறெங்குமே வழிபாடு கூடாது' என்று சபித்தார். மேலும் 'திருமணமான ஆண்கள் எவரும் இங்கு வந்து வழிபட்டால் தோஷமடைவார்கள்' என்றும் சபித்தார். ஆனால், 'பிரம்மாவுக்கு புஷ்கரைத் தவிர வேறெங்கும் வழிபாடு இருக்காது' என்றும், 'புஷ்கருக்கு வந்து வழிபடும் ஆண்களுக்கு எந்த தோஷமும் ஏற்படாது' என்றும் சரஸ்வதியின் சாபத்தைச் சற்றே மாற்றியமைத்தார் காயத்ரிதேவி

இதனால் மேலும் கோபமான சரஸ்வதி தேவி அந்த இடத்தைவிட்டு நீங்கி, ரத்னகிரி மலையில் நீரூற்றாகி 'சாவித்ரி ஜர்னா' என்று அழைக்கப்பட்டார். பின்னர், சரஸ்வதிதேவி தனிக் கோயிலில் குடிகொண்டாள் என்று புராணம் கூறுகிறது.

# ஒரு வார்த்தை போதும்...!

இயேசுவின் காலத்தில் ஜெருசலேமை ரோமானியர்கள் ஆண்டுவந்தனர். அதேநேரத்தில் யூதர்களின் மத நம்பிக்கைகளில் அவர்கள் தலையிடவில்லை. மேலும் ரோமானிய ஆளுநருக்கு அடுத்த நிலையில் யூத மதத்தின் அதிகார வர்க்கமாகிய யூத தலைமை சங்கத்தார் இருந்தனர். அவர்கள் யூத இனம் மட்டுமே புனிதமானது என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்துவந்தார்கள். அவர்களின் பழமைவாதத்தைத் துணிச்சலாகக் கேள்விக்குள்ளாக்கியவர் இயேசு. இதை இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவம் வழியாகவே நாம் தெரிந்துகொள்ளமுடியும்.

ஜெருசலேம், கப்பர்நாகூம், சமாரியா உள்ளிட்ட பெரிய நகரங்களின் சட்டம் ஒழுங்கைக் காத்துவந்த ரோமானியப் படையணியில், யூதர்கள் அல்லாத பிற இனத்தைச் சேர்ந்தவர்களும் உயர்ந்த பொறுப்புகளில் இருந்தனர். நூறு படை வீரர்களுக்குத் தலைவராக இருப்பவர்களை 'நூற்றுவர் தலைவர்' எனப் பெயரிட்டு அழைத்தனர். அப்படியான 'நூற்றுவர் தலைவர்' ஒருவர், இயேசுவைத் தேடி வந்தார். அதைக் குறித்து, மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து அதிகாரம் 8இல் 5 முதல் 17வரையிலான, இறை வசனங்களைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

அந்தக் காலத்தில் இயேசு கப்பர்நாகூமுக்குச் சென்றபோது 'நூற்றுவர் தலைவர்' ஒருவர் அவரிடம் உதவி வேண்டி வந்தார். "ஐயா, என் மகன் முடக்குவாதத்தால் மிகுந்த வேதனையுடன் படுத்த படுக்கையாகக் கிடக்கிறான்" என்றார். இயேசு அவரிடம், "நான் உங்கள் வீட்டுக்கு வந்து அவனைக் குணமாக்குவேன்" என்றார். நூற்றுவர் தலைவர் மறுமொழியாக,

"ஐயா, நீர் என் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால், ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொல்லுங்கள், என் மகன் நலமடைவான். நான் அதிகாரத்துக்கு உட்பட்டவன். என் அதிகாரத்துக்கு உட்பட்ட படை வீரர்கள் உள்ளனர். நான் அவர்களுள் ஒருவரிடம் 'செல்க' என்றால் செல்கிறார். வேறு ஒருவரிடம் 'வருக' என்றால் வருகிறார். என் பணியாளரைப் பார்த்து 'இதைச் செய்க' என்றால் அவர் செய்கிறார்" என்றார்.

இதைக் கேட்ட இயேசு, தம்மைப் பின்தொடர்ந்து வந்தவர்களை நோக்கி, "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: இஸ்ரவேல் மக்கள் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை. கிழக்கிலும் மேற்கிலும் இருந்து பலர் வந்து ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு ஆகியோருடன் விண்ணரசின் பந்தியில் அமர்வார்கள். அரசுக்கு உரியவர்களோ



புறம்பாக உள்ள இருளில் தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்" என்றார்.

பின்னர் இயேசு நூற்றுவர் தலைவரை நோக்கி, "நீர் போகலாம், நீர் நம்பியவண்ணமே உமக்கு நிகழும்" என்றார். நூற்றுவர் தலைவர் வீட்டுக்குத் திரும்பிச் சென்றபோது அவரது மகன் குணமடைந்துவிட்ட அதிசயம் நிகழ்ந்திருந்தது. அதன்பின் இயேசு பேதுருவின் வீட்டுக்குள் சென்றபோது, பேதுருவின் மாமியார் காய்ச்சலாய்ப் படுத்திருப்பதைக் கண்டார். இயேசு அவரது கையைத் தொட்டதும் காய்ச்சல் நீங்கிற்று. அவரும் எழுந்து இயேசுவுக்குப் பணிவிடை செய்தார்.



# பகைவனும் நண்பனே...!

நபிகள் நாயகம் தவறு செய்தவர்களைக் கூட, அவர்கள் திருந்தும் வகையில் மன்னித்து விடும் குணம் கொண்டவர். அவர் எதிரிகளிடமும் பகைமை காட்டாமல், முகத்தையே காட்டினார்.

ஒரு சமயம் நாயகத்தை கொலை செய்வதற்காக எதிரிகள் சூழ்ச்சி செய்தனர். இதையறிந்த நாயகம், மக்காவிலிருந்து மதினாவுக்கு தப்பினார். எதிரிகள், நாயகத்தை பிடிப்பவர்களுக்கு பரிசு தரப்படும் என அறிவித்தனர். அதைப் பெற வேண்டும் என விரும்பிய, சுராக்கா என்பவன், நாயகம் ஒளிந்திருந்த இடத்தை கண்டுபிடித்து அங்கு சென்றான். அங்கு தோழர் அபூபக்கருடன் பேசிக் கொண்டிருந்தார் நாயகம். அப்போது அபூபக்கர் பயந்த நிலையில் இருந்தார்.

அந்நிலையில் நாயகம், "இறைவன் நம்முடன் இருக்கிறார். அபூபக்கரே! நீங்கள் பயப்பட வேண்டாம்" என்றார். அதன் பின் இருவரும் இறைவனிடம் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். அதன் பலனாக, சுராக்கா சென்ற குதிரை, அந்த இடத்திலிருந்து ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாமல் திணறியது. பயந்து போன சுராக்கா நாயகத்திடம் சரணடைய, அவரும் பெருந்தன்மையுடன் மன்னித்தார். பகைவனையும் நண்பனாக ஏற்கும் பக்குவம் நாயகத்திற்கு மட்டுமே உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிபோகிறது நம் கடல் வளம்

■ தமிழரசன்







# வடமராட்சி கிழக்கில் நடப்பது என்ன? 36

வடமராட்சி கிழக்கில் கொள்ளை போகிறது நம் கடல்வளம். தடுக்க வேண்டிய அதிகாரிகள்தான் இதற்குத் துணைபோகிறார்கள் என்றால் கடற்றொழில் சங்கங்கள் - சமாசம் - சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் - ஏன் நம் மீனவர்கள் சிலர்கூட இந்த வளச்சுரண்டலுக்கு உடந்தையாக இருப்பதுதான் வேதனை.

வடமராட்சி கிழக்கு யாழ்ப்பாணத்தின் தனித்துவமான பிரதேசம். மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரை சுமார் 53 கிலோமீற்றர் நீண்ட கடற்கரைப் பரப்பைக் கொண்டது. அள்ள அள்ளக் குறையாத வளத்தைக் கடல் அள்ளிக் கொடுக்கிறது. இந்த வற்றாத வளத்துக்கு இயற்கை மட்டுமல்ல இப்பிரதேசத்தவர்களும்தான் காரணம். கடல் அட்டை பிடிப்பிலோ அல்லது சட்டவிரோத மீன்பிடிப்பிலோ இப்பிரதேசத்தவர்கள் ஈடுபடுவதில்லை.

"நாம் கடல் அட்டை பிடிப்பில் ஈடுபடுவதில்லை. வலையில் பிடிபடும் அட்டைகளையே எடுப்போம். இந்தக் கடல்வளம் எம் முன்னோர்கள் எமக்குத் தந்தது. இதை அடுத்த தலைமுறைக்கு நாம் கொடுக்க வேண்டும். தென்னிலங்கை மீனவர்களுக்கு மட்டுமல்ல இந்திய மீனவர்களுக்கும் இங்கு இடமில்லை. எங்கள் கடல் எங்களுக்கு மட்டும்தான் சொந்தம். இன்று எங்கள் கடல்வளத்தை பாதுகாக்க நீரியல் வளத் திணைக்களம் தவறிவிட்டது" என்கிறார் வடமராட்சி கிழக்குக் கடலோடிகள் அமைப்பின் பேச்சாளர் அண்ணாமலை.

இலங்கையின் 3 இல் 2 பங்கு கடற்பரப்பு தமிழ் மக்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. அது இன்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் கடல் எல்லைக்குள் சுருங்கி விட்டது. இந்நிலையில் இருக்கும் கடல் வளத்தையும் சுரண்டும் நோக்கில் தென்னிலங்கை மீனவர்கள் வடமராட்சி கிழக்குக்குப் படையெடுத்துள்ளனர். தென்னிலங்கை மீனவர்கள் எனக் குறிப்பிட்டாலும் புத்தளம், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் கணிசமானவர்கள் இதில் அடங்குகின்றனர். தவிர முஸ்லிம்களே அதிகளவானோராக உள்ளதுடன் அடுத்து சிங்களவர்களும் புத்தளம் உடப்பைச் சேர்ந்த குறைந்தளவிலான தமிழர்களும் இந்த அத்துமீறலில் ஈடுபட்டுள்ளனர்.

கடல் அட்டை பிடிப்புக்காக வந்த இவர்கள் வடமராட்சி கிழக்கின் கடற்கரைப் பகுதியில் வாடி அமைத்துத் தங்கியுள்ளனர். இந்தக் கடற்கரைப் பகுதியில் சுமார் 1,500 வரையிலான வாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 200 மீற்றர் வலயம் - சுனாமி அனர்த்தத்தின் பின்னரான சட்டம் - கடற்கரைப் பகுதியில் வாடி அமைப்பதற்கான இடத்தை சாதகமாக்கியது. குவிந்து கிடக்கும் இந்த வாடிகளில் ஒன்றில் 12 - 15 பேர் வரை தங்கியுள்ளனர். அத்துடன் மூவருக்கு ஒரு படகு என்ற அடிப்படையில் இவர்கள் கடல் அட்டை பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் கடல் அட்டை பிடிப்பில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்கியவர்கள் யார்? என நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் சுதாகரனிடம் வினவினோம். அவர்கள் கொழும்பில் - தலைமையகத்திலேயே அனுமதி பெற்றனர். தமக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றார். வாடி அமைப்பதற்கு பிரதேச செயலரின் அனுமதியைப் பெற்றால் போதுமானது. வரும் 23 ஆம் திகதிக்குள் வாடிகளை அகற்ற பிரதேச செயலர் உத்தரவிட்டுள்ளார் என்றும் கூறினார்.

**கோடிகள் கொழிக்கும் கடல் அட்டை பிடிப்பு**

கடல் அட்டைகள் அதிகம் கிடைக்கும் காலப் பகுதி இதுவாகும். சர்வதேச சந்தையில் கடல் அட்டைக்குப் பெரும் கிராக்கி காணப்படுகின்றது. சர்வதேச சந்தையில் ஒரு கிலோ கடல் அட்டை தரத்தைப் பொறுத்து 435 தொடக்கம் 1,000 டொலர்கள் வரை (இலங்கை மதிப்பில் 69,000 - 160,000 ரூபா) விற்பனையாகிறது. கடல் அட்டை சேகரிப்பாளர்கள் ஒரு கிலோ 20 ஆயிரம் ரூபா தொடக்கம் விற்பனை செய்கிறார்கள். சுமார் 5 மாத காலம் (ஏப்ரல் - ஒக்ரோபர் வரை) தங்கியிருக்கும் இவர்கள் கடல் அட்டை சேகரிப்பு மூலம் மட்டும் கோடி ரூபாய்களை வருமானமாகப் பெற முடியும்.

இது மட்டுமல்ல, ஏப்ரல் மாதம் தொடங்கினால் தென்னிலங்கையில் தொழில் செய்ய முடியாது. காரணம் பருவக் காற்றின் செல்வாக்கு. இதனால் அவர்கள் வடக்கு நோக்கி வருவது வழக்கம். போர் காலத்துக்கு முன்னரும் தெற்கு மீனவர்கள் வடக்குக்கு வந்து வாடி அமைத்து மீன்பிடியில் ஈடுபடுவதுண்டு. இவ்வாறு வருபவர்களால் பல தொல்லைகள், கலாசாரப் பிறழ்வுகள் ஏற்பட்டன.


"1977 - 78 களில் இப்பகுதியில் வந்து நின்றவர்களால் வாடி போட்டு நின்ற சிங்களவர்களால் நிறையப் பிரச்சினைகள் ஏற்பட்டன. கோயில் திருவிழாவில் நின்ற எங்களுடைய பெண்களுடன் அவர்கள் சேஷ்டை விட்டனர். இதனால் மோதல் ஏற்பட்டு அது இரண்டுபேரின் மரணத்தில் முடிந்தது. அதுக்குப் பிறகு போரும் தொடங்கிட்டுது. அங்கால இருந்து ஆட்கள் வாறேல்ல. இப்போது திரும்பவும் தொடங்கீட்டாங்கள்" என்கிறார் தாளையடியில் உணவகம் நடத்தி வருபவர்.

இப்போது வந்திருப்பவர்களாலும் எமது கலாசாரம் - பண்பாட்டுக்கு அச்சுறுத்தல் உள்ளது. அதுமட்டுமின்றி வறுமையில் வாடுபவர்களைக் கண்டறிந்து அவர்களின் காணியை வாங்குவதற்காகப் பெருந்தொகைப் பேரத்தில் முஸ்லிம்கள் ஈடுபடுகின்றனர் என இப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தென்னிலங்கையில் இருந்து வருவர்களுக்கு கடல் அட்டை பிடித்தல் என்பது ஒரு சாட்டு. கடல் அட்டை பிடிப்புக்கான அனுமதியுடன் வருபவர்கள் மீன்பிடி, சங்கு குளித்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.

"கடல் அட்டைக்காக நீருக்குள் செல்பவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஏற்றப்படும் கடலட்டை



# 60$^{0}$

மீன்கள் நிற்கும் இடங்களைக் கூறி சுருக்குவலை மூலம் அவற்றைப் பிடிக்கிறார்கள். போர் நடந்த கடற்பரப்பு என்பதால் பள்ளங்கள் நிறையவுள்ளன. இந்த இருண்ட பகுதிக்குள் பாரை மீன்கள் நிறைந்திருக்கும். அவ்வாறான சமயங்களில் வெடி (டைனமற்) வைத்து மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள். வெடியைப் பயன்படுத்துவதால் அப்பகுதியில் மட்டுமே பாரை மீன்கள் இறக்கின்றன. ஆனால் ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்தில் சூடை மீன்களும், இரண்டு கிலோமீற்றர் சுற்று வட்டாரத்தில் நெத்தலி மீன்களும் இறக்கின்றன. இவர்களை நாங்களோ அல்லது நீரியல் வளத்திணைக்களத்தினரோ பிடிக்க முயன்றால் மீன்களை கடலில் கொட்டி விடுகின்றனர்" என்கிறார் செம்பியன்பற்று கடற்றொழில் சங்கத்தின் தலைவர் ஜோசப் பிரான்சிஸ்.

சங்கு எடுத்தல், மீன்பிடித்தல் நடவடிக்கைகளில் ஈடுபவடுவதால் மேலதிகமாகப் பெருந்தொகையை சம்பாதிக்கிறார்கள் தென்னிலங்கை மீனவர்கள். சங்கு எடுத்தல் இலங்கையில் சட்டம் மூலம் தடை செய்யப்பட்டுள்ள போதும் இவர்களுக்கு நீரியல் வளத் திணைக்களத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளதாக கூறுகிறார் அதன் யாழ். மாவட்டப் பணிப்பாளர் சுதாகரன். சாதாரணமாக நல்ல இனப் பெரிய சங்கு ஒன்று உள்நாட்டு சந்தையில் 7 ஆயிரம் ரூபா தொடக்கம் விற்பனையாகிறது. அதுவே வலம்புரிச் சங்காக இருந்தால் 20 ஆயிரம் ரூபாவில் தொடங்கி சில இலட்சங்களைத் தொடும்.

**எதிர்ப்பு ஏன்?**

"எங்கள் கடல் எங்களுக்கே சொந்தம்" என்றுகூறும் இப்பிரதேசத்தவர்கள், தென்னிலங்கை மீனவர்களால் தொழில் ரீதியாகப் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். இவர்கள் 5 கிலோமீற்றருக்கு அப்பாலேயே அட்டை பிடிப்பில் ஈடுபட முடியும். ஆனால் இவர்கள் கரையோரத்திலேயே அதிகளவு நேரம் அட்டை பிடிப்பில் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் கரையில் படகுகளில் வேகமாக எந்நேரமும் பயணிப்பதாலும் இயந்திர ஒலியாலும் கரைவலை மீனவர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். "படகுகளில் செல்பவர்கள் தடையில்லாமல் செல்வதற்கு வசதியாக கரைவலைகளை வெட்டிவிடுகின்றனர் என்கிறார் வாடியில் பணியாற்றும் விஜயலட்சுமி என்பவர். முன்பு கரைவலையில் அதிகளவில் மீன்பிடிபடும் எனக் கூறிய அவர் 'இன்று (கடந்த சனிக்கிழமை) மூன்றரை கிலோ மீனே பிடிப்பட்டது. இந்த வாடியில் 8 பேர் தொழில் செய்கின்றனர். இந்த மூன்றரைக் கிலோ மீன் மூலம் கிடைக்கும் வருமானம் 8 குடும்பங்களுக்கும் போதுமா...?" அவரின் கேள்விக்கு என்ன பதில் கூறுவது.

இரவு நேரங்களல் அட்டை பிடிக்கத் தடை என்ற போதிலும் "சட்டம் என்பதே மீறுவதற்காகத்தான்" என்பது போல நடக்கிறார்கள். இவர்கள் பெரும் வெளிச்சத்தை உருவாக்கும் மின் விளக்குகளைப் பயன்படுத்தி அட்டை சேகரிக்கிறார்கள். 500 மீற்றர் வரை ஒளி பாய்ச்சும் இந்த மின் விளக்குகளால் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மாரி காலத்தில் மீன் பிடிக்க முடியாது என்பதால் தொழிலை நிறுத்தும் வடக்கு மீனவர்கள் இப்போது தென்னிலங்கை மீனவர்களால் பெரும் தொல்லைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். தொழில் இல்லாத காலத்தில் தென்னிலங்கைக்கு சென்று வாடியமைத்து மீன்பிடிப்பதோ அல்லது அங்கு சென்று மீன்களை விற்பது என்பதோ முடியாத காரியம். வடக்கு மீனவர்கள் இலங்கையின் வேறு எப்பகுதியிலும் மீன் விற்பனையில் ஈடுபட முடியாது என்பது எழுதப்படாத சட்டமாக அங்குள்ள கடற்றொழில் சங்கங்கள் பின்பற்றி வருகின்றன என்கிறார்கள் வடமராட்சி கிழக்கு மீனவர்கள்.

**விலைபோகும் மீனவர்கள்**


தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளுக்கு வடமராட்சி கிழக்கு மீனவர்களும் உடந்தையாக இருக்கின்றனர். பணத்தைப் பெற்றுக் கொண்டு தமக்குரிய பாடுகளை தென்னிலங்கை மீனவர்களுக்கு விட்டுக் கொடுக்கிறார்கள். ஒரு பாடு 10 தொடக்கம் 12 இலட்சம் ரூபா வரை 5 மாதங்களுக்கு குத்தகை போன்று விடப்படுகின்றது. இவ்வாறு பாடுகளை வாங்குவதை கண்டுகொள்ளாமல் இருப்பதற்காக 4 அல்லது 5 இலட்சம் ரூபா வரை கடற்றொழில் சங்கங்கள், சமாசம், சம்மேளனங்களின் உயர் மட்டங்களுக்கு வழங்கப்படுகின்றது.

இதேபோன்று நீரியல் வளத் திணைக்களம், பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் சில இலட்சங்கள் லஞ்சமாக வழங்கப்படுகின்றன. இந்த லஞ்சத் தொகை பலரும் கூறினாலும் இதில் மிகைப்படுத்தப்பட்ட தொகைகளும் உலவுகின்றன. அது தவிர தமக்குத் தேவையானவரின் வீடுகளில் உயர் அதிகாரிகள், தென்னிலங்கை வாடிகளின் முதலாளிகள், முக்கியஸ்தர்கள் மது விருந்துகளில் பங்கேற்றனர். கடந்த வெள்ளிக்கிழமை இரவுகூட செம்பியன்பற்றைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் இவ்வாறான விருந்து ஒன்று இடம்பெற்றதாக மக்கள் கூறினர்.

**பறிபோவது நம் வளமே**


"தென்னிலங்கையரின் அத்துமீறலுக்கு எதிராக மீனவர்கள் போராடினாலும் சங்கங்கள், சமாசம் என்பவை குழப்பங்களை ஏற்படுத்துகின்றன. நீரியல் வளத்திணைக்களம் முற்றுகைப் போராட்டத்தைக்கூட சில சங்கங்கள் இழுத்தடித்து குழப்பியடித்தன. இவ்வாறான சம்பவங்கள் தொடர அதிகாரிகளிடம் புரையோடிப் போய்க் கிடக்கும் லஞ்சமும் காரணம் என்கிறார் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் முரளி.

ஆனாலும், மீனவர்களின் போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை. பறிபோவது நம் வளம்தான் என்று எப்போது உணரப் போகிறோம்...!


அண்ணாமலை


ஜோசப் பிரான்சிஸ்



விஜயலட்சுமி


கடலில் எடுக்கப்பட்ட சங்குகள் உரப்பையில் போடப்பட்டு மண்ணில் புதைக்கப்பட்ட நிலையில் தென்னிலங்கைக்கு ஏற்றுவதற்காக எடுக்கப்படுகிறது.


சங்கு மறைவாக ஏற்றப்படும் வாகனம். இதன் இலக்கம் முழுமையாகத் தெரியாதவாறு பொருத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சிதம்பரபத்தினி



# பகுத்தறிவு

பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து இராமநாதன் விடுதியை நோக்கிச் சென்றால் சற்றுத் தூரத்திற்கப்பால், ஒரு வளைவு - வாழ்க்கையில் நிதானமாக - விழித்து நடவுங்கள் - இல்லையேல் வழுக்கி விழவேண்டி நேரிடும் என்று போவோரையும் வருவோரையும் எச்சரிப்பது போன்ற அமைந்த ஒரு வளைவு - ஒரு தெளிவு - ஒரு பள்ளம் அதன் வலப்புறத்தே நோக்கின் கண்கவர் கவின்பூங்கா. வாழ்க்கையே ஒரு ஓட்டப்பந்தயந்தான் என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டே சலசலக்கும் சிற்றோடை. ஏழில்மிகு மலர்கள் பூத்துக்குலுங்கும் பூச்செடிகள், இனிய நறுமணம், இத்தனை அலங்காரம் செய்தும் எங்களின் இயற்கை அழகிற்கு ஈடாவீர்களா? என்று பெண்களை எள்ளி நகையாடுவது போன்றமைந்த வண்ண மிகு குறோட்டன்கள்.

நடுவில் -

ஒரு சுனை - சிறிய வட்டமான சுனை இத்தகைய சூழ்நிலையிலும் துறவிகள் வாழமுடியும் என்பதை எடுத்துக் கூறுவன போன்ற நிமிர்ந்த - நேர்கொண்ட பார்வையையுடைய நீருடன் ஒட்டியும் ஒட்டாமலிருக்கின்ற தாமரை இலைகள், கண் விழித்த கமலங்கள், இவ்வளவும் நிறைந்த அந்தப் பூங்காவிலே - தம்மை மறந்து, உலகையும் மறந்து, இன்பப் போதையில் மூழ்கி மௌன பரிபாஷையில் சொல்லுக்கடங்காத ஆயிரம் வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தனர் காதலர் இருவர்.

அவர்கள் யார் என்று அறிய வேண்டாமா? பூரண பருவ வளர்ச்சியடைந்த காளையொருவன் மதுவுண்ட வண்டுபோல் இன்பப் போதையில் கிறங்கிக் கொண்டு நிற்பது போன்று மதர்த்து வளர்ந்து நின்றது ஒரு மரம். அதுதான் அந்தக் காதலன். ஆதவனின் ஒளிக்கிரணங்கள் பட்டு ஒளிவீசிய அதன் மஞ்சள் வர்ணமலர்கள் நெருங்கிவரும் தன் காதலியை அரவணைக்கும் ஆவலுடன் புன்னகை செய்து வரவேற்பது போன்று பிரகாசித்துக்கொண்டிருந்தன. காதலனை மகிழ்விக்கத் தலையில் பூச்சூடி ஒல்லி ஒசிந்து ஒயிலாகத் தவழ்ந்து வந்து மெல்ல அவனை அம்மரத்தைத் தழுவிக்கொண்டாள். அந்த நங்கை - அந்தக்கொடி - அதுதான் அந்தக்காதலி பெண்களிடத்து இயல்பாகவேயுள்ள நாணத்தை வெளிப்படுத்துவது போன்று அதனிடத்தே மலர்ந்த மலர்கள் குங்குமச் சிரிப்பாகத் திகழ்ந்தன. திடீரெனக் காற்று வேகமாக வீசியது. பயந்த கொடிமரத்தை இறுகத் தழுவிக்கொண்டது. எங்கிருந்தோ 'கல கல' என்ற சிரிப்பொலி தங்களைப் பார்த்துத்தான் நகைக்கிறார்களோ என்று எண்ணி நாணமடைந்த கொடி மரத்தைவிட்டு மெல்ல விலகியது. தன் காதலியை மிக நீண்ட நேரம் அணைத்திருக்க முடியவில்லையே என்று வருந்திய மரம் சிரித்தவர்களை அறிவதற்காக்ப் பார்வையைச் சுழற்றியது.

அங்கே கல்லாசனம் ஒன்றில் - காதலர் இருவர் ஒருவரையொருவர் அணைத்தபடி காதலின்பத்தில் மெய்மறந்திருந்தனர். மரம் மெல்லக் கொடியைத் தொட்டு 'அங்கே பார்' என்று அவர்களைக் காட்டியது. ஒரு கணந்தான், கொடி உடனேயே பார்வையைத் திருப்பிக்கொண்டது.

'ஏன் பார்வையைத் திருப்பிவிட்டாய்?'

'போங்கள் அவர்களைப் பார்க்க எனக்கென்னமோ வெட்கமாயிருக்கிறது'

'வெட்கமா? ஏன்?'

'இப்படி வெட்ட வெளியில்.......'

'அதெல்லாம் இங்கு சர்வ சாதாரணந்தான். உனக்குத்தான் இந்த மறைவில் கூட என்னைத் தழுவ நாணமாயிருக்கிறது.'

'அப்படி இடமென்றால் நான் உங்கள் கிட்டவே வரமாட்டேன்'

'பின்னே எங்கே போய்விடுவாயாம்' என்று கூறிக்கொண்டே கொடியை மெல்லப் பற்றியது மரம்.

'சீ சும்மா விடுங்கள் யாரும் பார்க்கப்போகிறார்கள்'

'அதிருக்கட்டும். உங்களை ஒன்று கேட்கலாமா?'

'என்ன கேளேன்'

'இவர்களைப்போல் நாமும் இன்பமாயிருக்க முடியுமா?'

'அடி பைத்தியமே! இவர்கள் மாலையில் மட்டுந்தான் ஒன்றாகச் சேர்ந்திருந்து மகிழமுடியும். மற்றநேரம் பிரிந்து விடுவார்கள். நாம் இருவரும் ஒன்றாகவே இருந்து எந்நேரமும் மகிழலாமே. நீ மட்டும் மனசு வைச்சால்.......'

'அப்படியா' என்று மகிழ்ந்து கூவிய கொடி திரும்பவும் காற்று வேகமாக வீசவே மரத்தை அன்புடன் அணைத்துக் கொண்டது.

ஒரு நாள்.

என்றுமில்லாத திருநாளாக அப்பூங்காவிலே விசும்பல் ஒலி கேட்டது. அதிசயித்தகொடி காதலர் இருந்த புறம் நோக்கிற்று. அங்கே, அந்தக் காதலி கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். காதலன் அவளைத் தேற்றிக் கொண்டிருந்தான். வியப்படைந்த கொடி மரத்தைக் கேட்டது.

'அவள் சென்ற வருடந்தான் இங்கு படிக்க வந்தாள். அவனுக்கோ இன்றுடன் படிப்பு முடிந்துவிட்டது. அவன் அவளை விட்டுப்பிரியப் போகின்றான். காதலனைப் பிரியப் போகின்றேனே என்றுதான் அவள் அழுகிறாள்.'

'ஐயோ அப்படியானால் நீங்களும் என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிடுவீர்களா?' சிணுங்கியபடியே கோபமும் துன்பமும் பொங்கிவரக் கொடி எட்டப்போய் நின்றது. கொடியை மெல்ல அணைத்த மரம் 'என் கண்ணே! நான் உன்னை விட்டுப்பிரிவேனோ? அன்று நான் சொல்லியதை நீ அதற்குள் மறந்துவிட்டாயா? அவர்கள் இருவரும் எங்கோ ஒரு இடத்திலிருந்து இங்கு படிக்க வந்தார்கள். வந்தபடியே பிரிந்தும் செல்கிறார்கள். நாம் இருவருமோ என்றைக்கும் ஒரே இடத்தில் இருப்பவர்கள். எம்மை யாரும் பிரிக்க முடியாது.'

'உண்மையாகவா?' என்று மகிழ்ந்து கொடி மரத்தைத் தழுவி முத்தமிட்டது.

காதலர் இருவரும் தனிமையில் இனிமை கண்டனர். கொடியும் இப்பொழுது யாரையுங் கண்டு நாணமடைவதில்லை. அந்தக் காதலர்கள் இப்பொழுது இல்லையல்லவா? அன்றும், அப்படித்தான். காற்று எதுவும் வீசாமலேயே கொடி மரத்தை அன்புடன் தழுவிக் கொண்டிருந்தது. அப்பொழுது. 'கல கல' என்ற சிரிப்பில்பொலி கேட்டது. ஆச்சரியமடைந்த கொடி மீண்டும் அந்தக்காதலர்கள் தான் வந்தார்களா? அல்லது புதுக்காதலர்கள் தான் யாராவது வந்தார்களா என்று அறிய ஆவல் கொண்டது. அங்கே வரும் பெண் - அவள் முன்புவந்த அதே பெண்தான். அவள் அருகில் வருபவன்? அவன் புதியவனாக அல்லவா இருக்கிறான். ஆம். அவன் புதியவனே தான். சந்தேகமில்லை.

'இவன் புதியவன்தானே?' தனது சந்தேகம் தெளிவதற்காக மரத்தைக் கேட்டது கொடி.

'புதியவன்தான்'

'யார் அவளின் அண்ணாவா?'

'இல்லை. அவளின் காதலன்.'

'அப்படியானால் முன்பு வந்தவன்?'

'அவனும் அவள் காதலன்தான்.'

'ஒரு பெண்ணுக்கு இரண்டு காதலனா? ஆச்சரியமாயிருக்கே'

'அம்மட்டோடு இருந்தாலாகுதல் பரவாயில்லை'

'என்ன சொல்கிறீர்கள்?'

'மனிதர்களில் ஒரே ஒருவரைக் காதலித்து மணம் புரிந்தவர்கள் மிகவும் அருமையே'

'ஐயையோ! இப்படியெல்லாம் செய்வதற்கு இந்த மனிதர்களுக்கு அறிவே இல்லையா?'

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# நாயகிகளின் போட்டி...!






ஜேம்ஸ்பொண்ட் ஜோடியாக நடிக்க நடிகைகள் ஏஞ்சலினா ஜூலிக்கும், ஹெலனாவுக்கும் இடையே போட்டி நிலவி வருகிறது.

டேனியல் கிரெய்க் 'குவான்டம் ஒவ் சோலஸ்', 'ஸ்கைஃபால்', 'ஸ்பெக்டர்' உட்பட பல படங்களில் ஜேம்ஸ் பொண்டாக நடித்துள்ளார். இவர் கடைசியாக ஒரு ஜேம்ஸ்பொண்ட் படத்தில் நடிக்கவுள்ளார். அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் படத்தை டேன்னி பாயல் இயக்கவுள்ளார்.

'வான்டட்', 'சால்ட்', 'திடூரிஸ்ட்', 'அன்புரோக்கன்' உள்ளிட்ட ஏராளமான ஹொலிவூட் படங்களில் ஹீரோயினாக நடித்தவர் ஏஞ்சலினா ஜூலிக்கும், 'சின்ட்ரில்லா', '55 ஸ்டெப்ஸ்', 'நைட் வில் ஃபால்' போன்ற படங்களில் நடித்துள்ள நடிகை ஹெலனாவுக்கும் இடையே ஜேம்ஸ்பொண்ட் ஹீரோயினாக நடிப்பதில் கடும் போட்டி நிலவியது.

இந்நிலையில் எல்லோர் மனதிலும் ஏஞ்சலினா ஜூலி பெயர் இருந்தது. ஆனால் பட தயாரிப்பாளர் ஹெலனாவை ஹீரோயினாக ஒப்பந்தம் செய்துள்ளார். ஜேம்ஸ்பொண்ட் வரிசையில் 25 ஆவதாக உருவாகும் இப்படத்தை வரும் 2019 ஆம் ஆண்டு வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.



# குஷி வரும் குதிரைச் சந்தை

வருடத்திற்கு ஒரு தடவை கூடுகின்ற இந்தக் குதிரைச் சந்தை ஐரோப்பிய நாடுகளில் பிரசித்தமானது. இங்கிலாந்தின் ஒரு சிறிய பட்டினமான கும்பிரயனில் (Cumbrian) உள்ள அப்பிள்பை (Appleby) என்னும் இடத்திலேயே இச் சந்தை கூடுகிறது.

எப்பொழுதுமே பயணித்துக் கொண்டிருக்கும் நாடோடிகளை ஒத்த ஒரு சமூகத்தினர் தங்கள் குதிரைகளை மற்றவர்களின் பார்வைக்கு விடுவதும், அவற்றை விற்பதும் வழமையான நிகழ்வுகள். இந்த நிகழ்வு சென்ற ஆண்டு பெய்த கடும் மழையால் அதிகாரிகளால் தடை செய்யப்பட்டது. காரணம் இங்குள்ள ஏடன் ஆற்றில்தான் இவர்கள் தங்கள் குதிரைகளைக் கழுவிக் குளிப்பாட்டி, சந்தைக்கு தயார்படுத்துவது வழமை.

பெருமழை காரணமாக வெள்ளம் வரலாம் மிருகங்கள் காயப்படலாம் அல்லது இறக்கலாம் என்பதற்காகவே இந்தச் சந்தை கூடுவதற்குத் தடை விதித்தார்கள். இந்த ஆண்டுக்குரிய சந்தை வழமைபோல் ஆரம்பமாகி உள்ளது. இந்தச் சந்தை வரும் வெள்ளிக்கிழமை வரை கூடும்.


30,000 பேர் வரையில் இங்கு கூடியிருக்கிறார்கள். 17ஆம்நூற்றாண்டிலிருந்து, பரம்பரை பரம்பரையாக தொடரும் சந்தை இதுவெனச் சொல்லப்படுகின்றது. அழகாக ஜோடிக்கப்பட்ட, தங்கள் குதிரை பூட்டிய வண்டிகளில் இவர்கள் இங்கு வந்து இறங்குகிறார்கள்.

# நோபல் பரிசளிப்பிலும் சர்ச்சை...!

இந்த ஆண்டுக்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசு பாலியல் ஊழல் பிரச்சினைகளால் அறிவிக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. *1895 ஆம் ஆண்டு நவம்பர் 27* அன்று அல்ஃபிரட் நோபல் எழுதிவைத்த உயில்படி இலக்கிய நோபல் 1901 முதல் ஆண்டுதோறும் அறிவிக்கப்பட்டு வருகிறது.

*1914,1935,1940,1941,1942, 1943*ஆகிய ஆண்டுகளில் படைப்புகள் செறிவாக இல்லை என்பதற்காக பரிசுகள் அறிவிக்கப்படவில்லை. தற்போது பரிசுகளை வழங்கும் ஸ்வீடிஷ் அக்கடமியைச் சேர்ந்த புகைப்படக்காரர் ஜீன் கிளாட் அர்னால்ட் 18 பெண்களிடம் பாலியல் ரீதியாக தொல்லைகள் கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இவரும், மனைவி கடாரினாவும் இணைந்து நடத்தும் கலாசார கிளப்புக்கு ஸ்வீடிஷ் அக்கடமி நிதியளித்து வருகிறது. பல்வேறு புதிய பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களுக்கு வெளிச்சம் தந்த விருது இலக்கிய நோபல். எ.கா. ரஷ்ய பத்திரிகையாளர் ஸ்வெட்லானா அலெக்ஸிவிட்ச்(2015). ஸ்வீடிஷ் அக்கடமி தன் மீதான கறையைத் துடைத்து உயிர்ப்புடன் மீண்டும் எழவேண்டும் என்பதே கலைஞர்களின் விருப்பம்.




# 17,000 டொலர் இனிக் குப்பையிலா?

வித்தியாசமாகச் சிந்திக்கும், அப்பிள் நிறுவனம் வெளியிட்ட தங்க ஸ்மார்ட் கைக்கடிகாரம் உங்கள் ஞாபகத்திற்கு வருகிறதா? மூன்று வருடங்களுக்கு முன்பு சந்தைக்கு இது அறிமுகமாகியபோது அப்பிள் நிறுவிலைகூடிய வெளியிட்ட அதிவிலைகூடிய உற்பத்திப் பொருள் இதுவாகவே இருந்தது. இது நீண்ட காலத்திற்கு நிலைக்குமா? என்பதில் பல முரண்பட்ட விவாதங்கள் இருந்து வந்துள்ளன.

அப்பொழுது பயப்பட்டதுபோல, 2015 இல் விற்பனைக்கு வந்த இந்த ஸ்மார்ட் கைக்கடிகாரம் மென்பொருள் இப்பொழுது அப்டேற்றாகிய பின்பு, பழையதாகி விட்டது



அந்தப் 17 ஆயிரம் டொலர் பெறுமதியான தங்கக் கைக்கடிகாரம். இனி வரும் அப்டேற்றுகள் இந்த கைக்கடிகாரத்தைப் பொறுத்தமட்டில் செல்லுபடியாகாதவையாகிவிட்டன.

பல பிரபலங்கள் இதை முன்பு வாங்கியிருந்தார்கள். ஆனால் இவற்றுள் எத்தனை விற்கப்பட்டன என்ற புள்ளி விவரங்கள் இல்லை. இப்பொழுது இந்தக் கடிகாரத்தின் உற்பத்தி முறை அடியோடு மாற்றப்பட்டிருப்பதோடு, விலையும் மலிந்திருக்கின்றது. இன்னொன்றையும் கவனித்தாக வேண்டும். தங்க ஸ்மார்ட் கைக்கடிகாரம் அறிமுகமாகியபோது, அதன் இயக்கங்கள் பல, ஐபோனிலுள்ள "அப்ஸ்" களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. ஆனால் இப்பொழுது தன் பணிகளை ஸ்மார்ட் கடிகாரம் தானே செய்து கொள்ளும் விதத்தில் உற்பத்தி முறை மாற்றப்பட்டிருக்கின்றது.

எதிர்பார்ப்பையும் தாண்டி 18 மில்லியன் கடிகாரங்கள் விற்பனையாகி என்கின்றன புள்ளிவிவரங்கள்.

அப்பிள் அப்பிள்தான் ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 2050 இல் கடலில்

# மீன்களைவிட பிளாஸ்ரிக் அதிகம்

**நாம்** அன்றாடம் பயன் படுத்தும் பொருள்களில் தவிர்க்க முடியாததாகிவிட்டது பிளாஸ்ரிக். தேவைக்கதிகமாகப் பயன்படுத்தும்போது ஏற்படும் விளைவுகளும் விபரீதங்களும் ஏராளம். பிளாஸ்ரிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படாமல் தூக்கி எறியப்படுவதால் சுற்றுச்சூழலுக்கு மட்டுமல்ல, அது நமக்கும் பேராபத்தை உருவாக்கும். இன்று உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் அணு ஆயுதத்தைவிடக் கொடியது பிளாஸ்ரிக்.

இம்முறை உலக சுற்றுச் சூழல் தினம், பிளாஸ்ரிக் மாசு விழிப்புஉணர்வுக்காக 'பீட் பிளாஸ்ரிக் பொல்யூஷன்' (BeatPlasticPollution) என்ற வாசகத்தை ஹேஷ்டேக்காக வைத்திருக்கிறது உலக சுகாதார நிறுவனம். இந்த நாளில் பிளாஸ்ரிக் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள், விளைவுகள் குறித்தும் உலகளவில் பிளாஸ்ரிக் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் குறித்தும் பார்க்கலாம்.

'உலகிலுள்ள பெருங்கடல்களில் ஆண்டுக்குச் சுமார் 80 லட்சம் தொன் வீதம், இதுவரை சுமார் 15 கோடி தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் கொட்டப்பட்டிருக்கின்றன" என்கிறார்கள் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக (National University of Singapore) ஆராய்ச்சியாளர்கள். அதாவது, ஒரு நிமிடத்துக்கு ஒரு லொறி பிளாஸ்ரிக் குப்பைகளை கடலில் கொட்டிக் கொண்டிருக்கிறோம். இவை கடல் நீரோட்டத்தால் அடித்துச் செல்லப்பட்டு, ஐந்து இடங்களில் மிகப் பெரிய குப்பைத் தீவுகளாக மிதந்து கொண்டிருக்கின்றன. 'இப்படித் தொடர்ந்து கொட்டிக் கொண்டிருந்தால், 2050ஆம் ஆண்டில் கடலில் வாழும் மீன்களைவிட பிளாஸ்ரிக் பொருள்களின் எண்ணிக்கை அதிகரித்துவிடும். அவை மீன்களின் எண்ணிக்கையையும் வெகுவாகக் குறைத்துவிடும்' என்கிறார்கள் இந்த ஆய்வாளர்கள்.

'உலகம் முழுவதும் மனிதர் களுக்கு மிக முக்கிய உணவாக இருப்பது மீன். சிறிய மீன்கள் உண்ணும் உணவுகளில் பிளாஸ்ரிக் பொருள்களும் அடக்கம். சில வகை பிளாஸ்ரிக்குகள் மட்டும் செரிமானமாகிவிடும். அப்படிச் செரிக்கப்பட்ட பிளாஸ்ரிக்கிலிருக்கும் வேதிப் பொருள்கள் அதன் உடலில் கலந்துவிடும். இந்தச் சிறிய மீன்களை உண்ணும் பெரிய மீன்களுக்கு பிளாஸ்ரிக் கடத்தப்படுகிறது. பிளாஸ்ரிக் வேதிப் பொருள்களால் பாதிக்கப்பட்ட மீனை நாம் சாப்பிடும்போது, பாதிப்புக்கு ஆளாகிறோம்' என்று திடுக்கிடவைக்கிறார்கள் 'நஷனல் ஜோக்ரபிக் சனல்' ஆய்வாளர்கள்.

ஒரு சதுர மீற்றர் கடல்நீரில் சுமார் 25,000 மைக்ரோ மற்றும் நானோ பிளாஸ்ரிக்' (ஒரு மைக்ரோ மீற்றர் என்பது ஒரு சென்ரிமீற்றரில் 10,000இல் ஒரு பகுதி, ஒரு நானோ என்பது ஒரு சென்ரிமீற்றரில் 1,00,00,000 இல் ஒரு பகுதி) துகள்கள் இருப்பதாக கனடாவின், வன்கூவர் அக்வேரியம் ஓஷியன் பொல்யூஷன் ரிசேர்ச் புரோகிராம் (Vancouver Aquarium Ocean Pollution Research Program) என்ற அமைப்பின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வில், 8 நாடுகளின் கடல்நீரிலிருந்து எடுக்கப்பட்ட உப்பில், அதற்குத் தொடர்பில்லாத 72 துகள்கள்கள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அவற்றில், 30 மைக்ரோ பிளாஸ்ரிக் துகள்கள், 17 வண்ணப் பொருள்கள், 4 தூசுகள், 21 துகள்கள் ஆகியவை [illegible] இல்லை. [illegible] கடல்வாழ் உயிரினங்களின் 'லார்வாக்களின்' இரத்த நாளங் களுக்குள் செல்லுமளவுக்குச் சிறியவை. இதை சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவை உயிரினங்களின் செல் சுவர் (Cell Wall) துவாரங்களுக்குள் செல்லும். கடல் நீரோட்டத்தால் அடித்துச் செல்லப்படும் பிளாஸ்ரிக், ஆர்டிக் கடல் பகுதிகளிலும் குவிந்துகிடக்கின்றன.

தி ஆல்ஃபிரட் வீகனர் இன்ஸ்டிட்யூட் (The Alfred wegener Institute) என்ற ஜேர்மனி பல்கலைக்கழக ஆராய்ச்சியா ளர்கள் ஆர்டிக் பனிப்பாறைகளில் ஐந்து இடங்களில் நடத்திய ஆய்வில், ஒரு லீற்றர் ஐஸ் கட்டியில் சுமார் 12,000 மைக்ரோ பிளாஸ்ரிக் துகள்கள் இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். 'மைக்ரோ பிளாஸ்ரிக் துகள்கள் மற்றும் அதன் கழிவுகளால் ஆர்டிக் பனிப் பிரதேசத்தின் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, அங்கு வாழும் அரிய உயிரினங்கள் பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தச் சூழலில்தான், 'உலகின் பெரிய நிறுவனங்களால் தயாரித்து, விற்பனை செய்யப்படும் 90 சதவிகித தண்ணீர் போத்தல்களில் மைக்ரோ பிளாஸ்ரிக் துகள்கள் இருக்கின்றன' என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. அமெரிக்கா, சீனா, பிரேஸில், இந்தியா, இந்தோனேஷியா, மெக்ஸிக்கோ, லெபனான், கென்யா, தாய்லாந்து உள்ளிட்ட 11 நாடுகளில், 19 இடங்களில் சேகரிக்கப்பட்ட 259 குடிதண்ணீர் போத்தல்களை உலக சுகாதார நிறுவனம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டது. அவற்றில், சராசரியாக ஒரு போத்தலில் 325 மைக்ரோ பிளாஸ்ரிக் துகள்கள் இருந்தன.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகை சுதந்திரத்தின் வெற்றி 'பென்ரகன் பேப்பர்ஸ்'

ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு செய்தியாளரும் கொண்டாட வேண்டிய நாள் - ஜூன் 13. 'பென்டகன் பேப்பர்ஸ்' - செய்தியாய் வெளியானதும், 40 ஆண்டுகள் கழித்து அரசிதழில் இடம்பெற்றதும் இதே திகதியில் தான். ஒரு போர். பல பொய்கள். ஒரு பத்திரிகை. பல வழக்குகள். நீதியின் தயவால், அதிகார மையத்தை எழுத்துரிமை வென்றது: இதுவே 'பென்டகன்' கதைச் சுருக்கம்.

'வியட்நாம்' - காலனி ஆதிக்க சக்திகளால் வடக்கு, தெற்கு என்று இரண்டாகப் பிளவுபட்டு இருந்தது. வடக்கு வியட்நாம், சீனாவின் கைப்பொம்மையாக இருந்தது. தென் வியட்னாமுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்தது. தென் வியட்னாமில் தனது அதிகாரத்தை நிலைப்படுத்துதல், அதன் மூலம் வட வியட்நாம் மீது தாக்குதல் நடத்துவது. இதுதான் அமெரிக்க அரசாங்கம் போட்ட திட்டம்.

இதன் ஒரு பகுதியாக, தென் வியட்நாம் பகுதியில், தனக்கு வேண்டிய அரசு அமைவதில் அமெரிக்கா அதிக ஆர்வம் காட்டியது. அதன் உள்நாட்டு அரசியலில், நேரடியாகவும் மறைமுகமாகவும் தீவிரமாக ஈடுபட்டது. 1954 ஜூலையில் அரசர் பாவோ டாயி, தென் வியட்நாமின் பிரதமராக, அமெரிக்க நிதி உதவி பெற்றுத் தரக் கூடிய ஒருவரை பிரதமராக நியமிக்க நினைத்தார். நோ டிங் டையும் சரியான நபராக இருந்தார் நியமிக்கப்பட்டார். பதவிக்கு வந்த சில நாட்களிலேயே டையும் அரசருக்கு எதிரான பாதையில் செல்லத் தொடங்கினார்.

1955 ஒக்ரோபரில் மோசடி வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினார் டையும். அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. வின் முகவர் எட்வர்ட் லேன்ஸ்டேன் முழு ஒத்துழைப்பு வழங்கினார். தனது சகோதரர் நோ டிங் துக் தலைமையில் அத்தனை அராஜக வழிகளின் மூலமும் வாக்கெடுப்பில் வெற்றி பெற்று, தென் வியட்நாமின் சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆனார் நோ டிங் டையும். அப்போது ஆரம்பித்தது அவரது ஆட்டம்.

வெறும் அரசியல் மட்டுமல்ல வன்முறை கலந்த மத வெறியாட்டமும் இணைந்து கொண்டது. பௌத்த மதத்தினர் மிகுந்த வியட்நாமில், கிறிஸ்தவ கத்தோலிக்க மதத்தை நிறுவுகிற பணியில் இறங்கினார் டையும். 1957 இல் தனது தேசத்தை, கன்னி மேரிக்கு 'அர்ப்பணித்தார்'. புத்தரின் பிறந்த நாளாக கொண்டாடப்படும் 'புத்த பூர்ணிமா' நாளன்று கூட, பௌத்த சமயக் கொடியை ஏற்றத் தடை விதித்தார். அதே சமயம், தனது சகோதரர் நோ டிங் துக், ஆர்ச் பிஷப்ஆகப் பதவி ஏற்றுக் கொண்டதை ஒட்டி, வத்திக்கான் கொடியை ஊரெங்கும் பறக்க விட்டார். புத்த விகாரங்கள் தாக்கப்பட்டன. புத்த மதத் துறவிகள் கொல்லப்பட்டனர்.

1954 முதலே டையும் அரசுக்கு ஆதரவு தெரிவித்து வந்தது அமெரிக்க அரசு. ஆனால், நாளுக்கு நாள் அவருக்கு, மக்களின் ஆதரவு தேய்ந்து வருவதை உணர்ந்த அமெரிக்க அரசு, வேறு ஒரு தலைவரைத் தேடியது. இராணுவ உயர் அதிகாரி, ஜெனரல் டூங் வான் கிடைத்தார். சி.ஐ.ஏ. முகவராக இருந்த லூசியன் கொனன், 1963 ஓகஸ்ட் 23 ஆம் திகதி வியட்நாம் இராணுவ அதிகாரிகளை சந்தித்து, கலவரத்துக்கு வித்திட்டார்.




1963 நவம்பர் முதலாம் திகதி அமெரிக்காவின் நிதி, நிர்வாக உதவியுடன், இராணுவ கலகம் ஏற்பட்டது. ஜனாதிபதி நோ டிங் டையும், அவரது சகோதரர் உட்பட பலரும் கொல்லப்பட்டனர். கலகக்காரர்களை ஊக்குவித்த அமெரிக்கா, புதிதாக வேறொரு பொம்மை அரசை நிறுவியது. 1964 ஓகஸ்ட் 2 ஆம் திகதி 'டான்கின் வளைகுடா' சச்சரவு, வியட்நாம் போருக்கான தளம் அமைத்துத் தந்தது.

இதன் பிறகு சுமார் 4 ஆண்டுகள் கழித்து 1968 ஜூலை 28 ஆம் திகதி சி.ஐ.ஏ. இயக்குநர் ஜான் மெக்கோனே, ஜனாதிபதி ஜோன்சனுக்கு ஒரு தகவல் அனுப்புகிறார். "விநியோக மையங்களைத் தாக்குவதைக் காட்டிலும், நேரடியாக வட வியட்நாம் மீது விமானத் தாக்குதல் நடத்தினால்தான், வட வியட்நாம் போரில் இறங்கும்." - இதன் பிறகுதான் அமெரிக்கா, வட வியட்நாம் மீது நேரடித் தாக்குதலைத் தொடங்குகிறது.

இப்படியாக வட வியட்னாம் மீது திட்டமிட்டு ஒரு போரைத் திணித்தது அமெரிக்கா. சுமார் 8 ஆண்டுகள் நீடித்த வியட்னாம் போரின் முடிவில் வடக்கு வியட்னாம் வெற்றி பெற்றது. அமெரிக்கா, அவமானகரமான தோல்வியைத் தழுவியது. 1976 இல் மீண்டும் ஒன்றுபட்ட வியட்னாம் உருவானது.

பாரில் ஈடுபடுவதை தாமும் அமெரிக்காவும் விரும்பவில்லை என்றே அடுத்தடுத்து வந்த ஜனாதிபதிகள் ஹரி ட்ரூமென், ஐசன்ஹோவர், ஜோன் எஃப் கென்னடி, லிண்டன் ஜோன்சன் சொல்லி வந்தனர். அதற்கு முற்றிலும் மாறாக, வலிந்து ஒரு போரை உருவாக்கி, அதில் அமெரிக்காவை ஈடுபடுத்தி, தேசத்துக்கு சேதம், அவமானம் ஏற்பட நேரடிக் காரணமாக இருந்துள்ளனர். இதைத்தான் 'பென்டகன் பேப்பர்ஸ்' ஆதாரத்துடன் நிரூபித்தது.

1967 ஜூன் 17 ஆம் திகதி அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் றொபேர்ட் மெக்னமாரா, 'வியட்நாம் ஸ்டடி டாஸ்க் போர்ஸ்' என்று ஒரு ஆய்வுக் குழு அமைத்தார். இப்படி ஓர் ஆய்வை தான் மேற்கொள்கிறேன் என ஜனாதிபதி ஜோன்சன், இராஜாங்க செயலாளர் டீன் ரஸ்க் உட்பட யாருக்கும் அவர் தெரிவிக்கவே இல்லை.

3000 பக்கம் ஆய்வு, 4000 பக்கம் ஆவணங்கள் 47 தொகுதிகள் கொண்டது இந்த 'சென்சிடிவ்' ஆய்வறிக்கை, 1964-65 ஆம் ஆண்டுகளில் மெக்னாட்டனிடம் உதவியாளராகப் பணி புரிந்தவர் டேனியல் எல்ஸ்பேர்க். 1967 இல் பல மாதங்கள், பென்டகன் ஆய்வுப் பணியிலும் ஈடுபட்டவர். 1969 இல் ஆய்வறிக்கையைக் காணும் உரிமை இவருக்குக் கிடைத்தது. போர் எதிர்ப்பாளரான எல்ஸ்பர்க், 1969 ஒக்ரோபரில், தனது நண்பர் அன்ரனி ரஸ்ஸோவுடன் இணைந்து, ஆய்வறிக்கையைப் பிரதி எடுத்தார்.

1971 பெப்ரவரி மாதம் 'தி நியூயோர்க் ரைம்ஸ்' செய்தியாளர் நீல் ஷீகன் - எல்ஸ்பர்க் சந்திப்பு நிகழ்ந்தது. அடுத்த மாதமே 43 தொகுப்புகளை ஷீகனிடம் தந்தார் எல்ஸ்பர்க். 'அதி முக்கியமான ஆவணங்கள். வெளியிடலாமா...?' என்று சட்ட ஆலோசனை கேட்டது பத்திரிகையின் ஆசிரியர் குழுமம். 'லார்ட் டே ரூ லார்ட்' சட்ட நிறுவனம், 'கூடாது' என்றது. ஆனால், பத்திரிகை நிறுவனத்தின் சொந்த சட்ட ஆலோசகர் ஜேம்ஸ் கூடலே, அமெரிக்காவின் 'முதல் சட்ட திருத்தம்' இருப்பதைச் சுட்டிக் காட்டி, வெளியிட ஆதரவு தெரிவித்தார்.

13 ஜூன் 1971 - 'தி நியூயோர்க் ரைம்ஸ்' தனது முதல் பக்கத்தில் வெளியிட்டது - 'Vietnam Archive - Pentagon study traces three decades of growing U.S. involvement'. மூன்று நாட்கள் கழித்து ஜூன் 16 இல் அமெரிக்க அரசாங்கம் கூட்டு நீதிமன்றம் மூலம், 'நியூயோர்க் ரைம்ஸ்' நாளிதழுக்கு எதிராகத் தடையாணை பெற்றது. ஜூன் 18 முதல், 'வோஷிங்டன் போஸ்ட்' இக்கட்டுரையை வெளியிடத் தொடங்கியது. அதற்கு எதிராகவும் தடை அறிவித்தது அரசு.

பொஸ்டன் நகர நீதிமன்றத்தில் சரண் அடைந்த எல்ஸ்பர்க், "இது எனது கடமை் பொதுமக்களிடம் இருந்து இந்தத் தகவல்களை மறைப்பதில், நான் கூட்டாளியாக இருக்க விரும்பவில்லை. இதற்கான முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)



அன்ரனி ரூஸோ (இடதுபுறம்), டானியல் எல்ஸ்பேர்க் கூட்டு நீதிமன்ற கட்டடத்தில் ஊடகங்களுக்குத் தகவல் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகைப்பதை....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியானம் போன்றவற்றின் மூலம் மீட்டு எடுக்கலாம். பொருளாதார ரீதியான பிரச்சினைகளை ஓரளவுக்கு சமாளிக்கப் புகைப்பதை கைவிடுவதே சிறந்த வழி.

புகைக்கும் பழக்கத்தை நிறுத்திய இருபதாவது நிமிடத்திலிருந்து நம் உடல் சுத்தமாக ஆரம்பிக்கும். இரத்த ஓட்டமும் இதயமும் சீராக இயங்கத் தொடங்கும். ஒன்பது மாதங்களில் இருமல், மூச்சுத்திணறல் போன்ற நோய்கள் குணமாகும். ஐந்து வருடத்தில் பக்கவாதம் வருவதற்கான வாய்ப்புகள் முற்றிலும் நீங்கும். 15 வருடங்களில் பழைய ஆரோக்கியம் மீண்டுவிடும். 30 வயதில் புகைப்பழக்கத்தை கைவிடும் ஒருவருக்கு 10 ஆண்டுகளும் 50 வயதில் புகைப்பழக்கத்தைக் கைவிடும் ஒருவருக்கு 6 ஆண்டுகளும் ஆயுட்காலம் அதிகரிக்கும் என்று உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

புகையிலையை நிறுத்த ஆரம்பித்த சில நாள்களில் கோபம், எரிச்சல் போன்றவை அதிகமாக ஏற்படும். இதைத் தவிர்க்க, தண்ணீர் அருந்துவது, உடற்பயிற்சி செய்வது, புத்தகம் படிப்பது போன்றவை உதவும். ஏலக்காய், கிராம்புக்கு சிகரெட் குடிக்கும் எண்ணத்தைக் கட்டுப்படுத்தும் தன்மை அதிகம் என்பதால், அதை மெல்லலாம். கரட், வெள்ளரிக்காய் மற்றும் பழங்களைச் சாப்பிடுவது நல்லது. சிகரெட்டிலிருந்து விடுபட பல்வேறு சிகிச்சை முறைகள் உள்ளது. அதற்குரிய மருத்துவர்களை கலந்தாலோசித்து, தேவைக்கேற்ற மருந்துகளை எடுத்துக்கொண்டால் சிகரெட் எனும் அரக்கனிடமிருந்து எளிதாக விடுபடலாம்" என்கின்றனர் மருத்துவர்கள்.

'தாய்லாந்து, தைவான், மலேசியா போன்ற நாடுகளில், 'பெரியவர்களுக்கு மட்டுமே பீடி, சிகரெட் போன்றவற்றை விற்பனை செய்ய வேண்டும்' என்ற சட்டம் இருக்கிறது. வெறும் சட்டமாக மட்டுமில்லாமல் தீவிரமாக கடைபிடிக்கவும் செய்கிறார்கள். இலங்கையில் 21 வயதுக்குக் குறைவானவர்களுக்குப் புகையிலைப் பொருள்களை விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும். ஆனால், சட்டத்தை யாரும் பின்பற்றுவதில்லை. ஆண்-பெண் வேறுபாடின்றி சிறு வயதினர் கூட தற்போது புகைப்பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளனர்.

புகையிலையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அரசும், தொண்டு நிறுவனங்களும் பல வடிவங்களில் விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டாலும், விதவிதமான போதைப் பொருள்கள் சந்தையில் அறிமுகமாகி, இளையோரின் வாழ்வைச் சீரழிக்கவே செய்கின்றன. சிகரெட் மட்டுமல்ல எல்லாப் போதைப் பொருள்களுக்குமே மனிதகுலத்துக்கு எதிரானவையே. அதை உணர்ந்து, பாதிக்கப்பட்டவர்களை மீட்க எல்லோரும் கரம் கோக்க வேண்டும். அப்போது சாத்தியம், புகையிலை இல்லாத, போதைப் பழக்கமில்லாத பெருவாழ்வு! •

## பகுத்தறிவு....

(14ஆம் பக்கம் பார்க்க)

'ஏன் இல்லை. எனக்கும் உனக்கும் இருக்கிற அறிவிலும் பார்க்க கடவுள் அவர்களுக்கு ஒரு அறிவைக் கூடவும் கொடுத்திருக்கிறாரே'

'அப்படியா? அது என்ன அறிவு?'

'அதுதான் பகுத்தறிவு'

'அப்படியென்றால்....'

'நல்லதையும் தீயதையும் ஆராய்ந்து - பகுத்து அறியக் கூடிய அறிவு'

'அத்தகைய பகுத்தறிவு இருந்துமா பண்பற்று நடக்கிறார்கள் இந்த மனிதர்கள்?'

'இந்த பகுத்தறிவு இருந்தபடியால் தான் அவர்கள் கெட்டுப்போனார்கள்'

'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'

'இங்கே பார். எனக்கும் உனக்கும் பகுத்தறிவு இல்லை. அதனால் தான் நாம் வருந்தக் கூடாதென்றெண்ணிக் கடவுள் எங்களை ஒன்றாகவே படைத்துவிட்டார். நாங்களும் இறக்கும்வரை பிரியமாட்டோம். ஆனால் மனிதருக்குப் பகுத்தறிவைப் படைத்துள்ளார். அவர்கள் தம் பகுத்தறிவை உபயோகித்து தமக்கு விரும்பியவரைத் தெரிவுசெய்ய வேண்டும். அப்படித் தெரியும் பொழுதுதான் அவர்கள் பகுத்தறிவை உபயோகிக்கத் தெரியாமல் இத்தகைய தவறுகளைச் செய்கிறார்கள்.'

'நீங்கள் சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே'

'விளக்கமாய்ச் சொல்கிறேன் கேள். நீ என்னை விட்டு வேறு யாரையும் மணம்புரிவாயா? காதலிப்பாயா?'

'ஊகூம். மாட்டவே மாட்டேன்'

'உன்னை யாரும் வேறொருவருக்கு வலோற்காரமாக மணம் செய்தால்...'

'நான் உங்களை இறுகத் தழுவிக் கொள்வேன். உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க முயன்றால் நான் இறந்து விடுவேன்'

'பார்த்தாயா? நாங்களாக இறந்தாலன்றி அல்லது வேறு யாராவது நம்மைக் கொன்றால் தான் எங்களைப் பிரிக்கலாம். அத்தனை உத்தம குணம் படைத்தவர்கள் நாங்கள். ஆனால் பகுத்தறிவு படைத்த மனிதர்களோ....'

'வேண்டாம். சொல்லாதீர்கள். அந்தப் பகுத்தறிவை எங்களுக்குத் தராத க[illegible] போற்றுவோம்' ஏன்று [illegible] காதலிக்கொடி.

## பத்திரிகை...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

1971 ஜூன் 29. செனட்டர் மைக் க்ரேவல், அறிக்கையின் 4100 பக்கங்களை, செனட்டுக்கான துணைக் குழுவின், பொதுஇணைய வெளியில் பதிவிட்டார். இதுவு மல்லாமல் சுமார் 40 இற்கும் மேற் பட்ட உள்ளூர் செய்திப் பத் திரிகைகள் அறிக்கையின் விவரங் களை வெளியிட ஆரம்பித்தன.

கீழமை நீதிமன்றங்களில் மாறு பட்ட தீர்ப்புகள் வந்தமையால், அத்தனை மனுக்களையும், கூட் டாக விசாரிக்க அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்மானித்தது. 1971 ஜூன் 30 ஆம் திகதி 6 இற்கு 3 கணக்கில் பத்திரிகைகளுக்கு ஆதர வாக, உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

"தடையற்ற சுதந்திரமான பத்திரிகையே, அரசின் ஏமாற்று வேலையை திறம்பட வெளிக் கொணர முடியும். மக்களை ஏமாற்ற நினைக்கும் அரசின் செயல்களைத் தடுப்பது, சுதந்திர மான பத்திரிகைகளின் தலையாய பொறுப்புகளில் ஒன்றாகும்" (நீதிபதி பிளக்) என்று உச்ச நீதிமன் றம் தெரிவித்தது. இதன் பிறகு, 'தி நியூயோர்க் ரைம்ஸ்' செய்தியின் 40ஆவது ஆண்டை ஒட்டி, 2011 ஜூன் 13 அன்று, மொத்தஅறிக்கை யும், முறைப்படி அரசிதழில் வெளியிடப்பட்டது. மகத்தான வெற்றி பெற்றது பத்திரிகை உல கம். யாராலும் மீற முடியாததாக மாறியது பத்திரிகைச் சுதந்திரம்.

## 2050இல் கடலில்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

17 போத்தல்களில் மட்டும் பிளாஸ்ரிக் துகள்கள் இல்லை. ஒரு போத்தலில் மட்டும் அதிகப்பட்சமாக 10,000 துகள்கள் இருந்திருக்கின்றன.

ஒருமுறை பயன்படுத்திய பின்னர் தூக்கிவீசப்படும் பிளாஸ்ரிக் பொருள்களான தண்ணீர், குளிர்பான போத்தல்கள், கப், கவர் போன்றவைதான் மிக முக்கியமாக சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துபவை. பிளாஸ்ரிக்கை மறுசுழற்சி செய்து பயன்படுத்தாமல், தூக்கி வீசுவதால்தான் இந்தப் பிரச்சினை பூதாகரமாகியிருக்கிறது. பிளாஸ்ரிக்கால் ஏற்படும் விளைவுகள் தெரியாமல், சூடான உணவுப் பொருள்களை பிளாஸ்ரிக் பேப்பர்களில் வைத்துச் சாப்பிடுகிறோம். ஆவியில் வேகவைக்கப்படும் இட்லியை, பிளாஸ்ரிக் கப்களில் வைத்து அவிக்கிறார்கள். உணவகங்களில் விற்கப்படும் ரீ, கோப்பி, குழம்பு, ரசம் போன்றவற்றை பிளாஸ்ரிக் கவர்களில் கட்டித் தருகிறார்கள். 'பிளாஸ்ரிக் பைகளில் கட்டித்தரப்படும் சூடான உணவுப் பொருள்களைச் சாப்பிடுவதால் புற்றுநோய் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது' என எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள்.

நிலத்தைவிட நீரில்தான் பிளாஸ்ரிக் பொருள்கள் அதிகமான ஆபத்துகளை ஏற்படுத்துகின்றன. கடலில் அதன் பாதிப்பு மிக அதிகம். கடல், ஆறுகளில் மிதக்கும் 'ஃபைட்டோபிளாங்டன்' (Phytoplankton) என்ற சிறு உயிர்கள் உணவுச் சங்கிலியில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவை கடலோரத்தின் கழிமுகப் பகுதிகளில் மிக அதிகமாகக் காணப்படும். கடல்வாழ் உயிரினங் களான மீன் குஞ்சுகள், லார்வாக் களுக்கு இவைதான் ஆதார உணவு. இப்போது, ஃபைட்டோபிளாங்ட னின் விகிதம் வெகுவாகக் குறைந்திருப்பதால் கடல்வாழ் உயிரினங்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாக மாறியிருக்கிறது.

முன்னர் நீரில், ஆறு ஃபைட்டோபிளாங்டன்கள் இருந்தால், ஒரு நானோ பிளாஸ்டிக் துகள் இருக்கும். இப்போது, ஒரு நக்கிரன் ஃபைட்டோபிளாங் டன், எட்டு நானோ பிளாஸ்ரிக் துகள்கள் என்ற விகிதத்தில் இருக்கிறது. மனிதன் உயிர்வாழ ஒட்சிசன் மிக முக்கியம். இந்த ஒட்சிசன் மழைக் காடுகளிலிருந்து 28 சதவிகிதமும், கடல் நுண்ணுயிர்களிலிருந்து 70 சதவிகிதமும், மற்ற வழிகளில் இரண்டு சதவிகிதமும் கிடைக் கும். கடலிலிருந்து கிடைக் கும் 70 சதவிகித ஒட்சிசன், பிளாந்தன்(Plankton) நுண்ணுயிர் களின் மூலமே பெறப்படுகிறது. இந்த நுண்ணுயிர்களில் பல வகைகள் உள்ளன. அவற்றில் ஃபைட்டோபிளாங்டன் நுண்ணுயிர்கள் மிக முக்கிய மானவை. இவை நானோ பிளாஸ்ரிக்கால் அதிகளவில் அழிந்துவருகின்றன. இதனால், ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் அதிகரித்திருக்கிறது.

நாம் கடலில் கொட்டும் பிளாஸ்ரிக் பொருள்கள், கடல் நீரோட்டத்தால் அடித்துச் செல்லப்பட்டு, ஜப்பான், அமெரிக்கா நாடுகளுக்கு நடுவிலிருக்கும் பசுபிக் பெருங்கடலில் மிகப் பெரிய இரண்டு பிளாஸ்ரிக் தீவுகளை உருவாக்கியிருக்கின்றன. இதேபோன்ற, பிளாஸ்ரிக் தீவு அட்லான்டிக் பெருங்கடலிலும் உண்டு. சிதைந்துபோன சிறிய பிளாஸ்ரிக் துகள்கள், பெரிய பிளாஸ்ரிக் பொருள்கள்தாம் இந்தத் தீவுகள் உருவாகக் காரணம். கடலில் கொட்டப்படும் பிளாஸ்ரிக்கில் 70 சதவிகிதம் கடலின் அடிமட்டத்திலிருக்கும் சேற்றில் புதைந்துவிடும். எஞ்சியவையே ஒன்றுசேர்ந்து தீவுகளாக மாறியிருக்கின்றன. பிளாஸ்ரிக் தீவு பகுதிகளில் கப்பல் போக்குவரத்தும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

மனித இனத்துக்குப் பெரிய அச்சுறுத்தலாக மாறியிருக்கிறது பிளாஸ்ரிக். பூமியை பிளாஸ்ரிக் கழிவுகளால் நிரப்பிக் கொண்டிருக்கிறோம். இது தொடர்ந்தால், வேறு கிரகங்களை நாடிச் செல்வதைவிட வேறு வழியில்லை. ஆனால், அவையெல்லாம் உடனடி சாத்தியமில்லாதவை. எனவே, கொஞ்சம் கொஞ்சமாக பிளாஸ்ரிக் பயன்படுத்துவதைத் தவிர்த்துவிட்டு, மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்தி இந்தப் பொன்னுலகைக் காக்க முயல்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரிட்டை சொல்லி அழ?



**இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்**

## காதிலை பூவோடை காதர் மஸ்தான்

வடமராட்சி கிழக்கிலை வெளிமாவட்ட ஆக்கள் வந்து தங்கி நிண்டு கடலைக் கொள்ளை அடிக்கினமெண்டு ஒரே பிரச்சினை. பாக்கப் போனால் தன்ரை கைவிரல் தான் தன்ரை கண்ணையே குத்து தெண்ட விவரம் இப்பதான் தெரியுது. ஒராளில்லை, இரண்டு பேரில்லை ஒட்டு மொத்தமா எல்லா அதிகார நாயளும் கையைநனைச்சுப் போட்டுதுகள் எண்ட மாதிரித்தான் கதைகிடக்குது. எட உது ஒரு சமூகத் தின்ரை பிரச்சினை எண்டது அந்த அதிகாரங்களுக்குத் தெரியாதோ?

சங்கு குளிச்சுக் கொண்டு போறாங்கள். கடலட்டையைப் பிடிச்சுக் கொண்டு போறாங்கள். கேட்டால் மத்திய அரசாங்க நீரியல் வளத் துறையிலை அனுமதி எடுத்துத்தான் பிடிக்கிறம் எண்டு சொல்லினம். அப்ப யாழ்ப்பாணத்திலை இருக்கிற உதவியிட்டைக் கேட்டால் எனக்கு அதொண்டும் தெரியாது மத்தியிலை அனுமதி எடுத்துக் கொண்டு வந்து தொழில் செய்யிற ஆக்களிட்டை நாங்கள் ஒண்டும் செய்யேலாது. அவை அந்த 14 சட்ட திட்டங்களுக்கை நிண்டபடி தொழிலைச் செய்யினமோ எண்டு மாத்திரம் பாத்துக் கொள்ளலாம் எண்டு உதவி சொல்லுது. உதவி நசிஞ்சு நசிஞ்சுதான் சொல்லுது. கதையிலையே ஒரு பயம் தெரியிது.

எத்தினையோ மையிலுக்கு அங்காலை இருந்து வந்து நிண்டு கொண்டு எங்கடை ஊரிலை வழமையாக் கடல்தொழில் செய்யிற ஆக்களை மிரட்டிப் போட்டுக் கிடக்கிற எங்கடை வளத்தைச் சுறண்டிக் கொண்டு போற ஆக்களை என்ன செய்யலாம். அவைக்கு உந்தத் துணிவு என்னெண்டு வந்தது? அவைக்கு ஆரோ பின்னாலை நிக்கினம். இல்லாட்டி அவையிட்டை ஆரோ கை நனைச்சிட்டினம் எண்டது வடிவாய்த் தெரியுது.

இந்தக் கடலட்டை விவகாரம் இன விரோதச் செயல்பாடுகளை ஊக்குவிக்கிறவையின்ரை செயற்பாடுகளுக்கு அப்பாலை கை நனையல்தான் கூட நடந்திருக்கு. இனப் பிரச்சினை எண்ட கவசத்தை முன்னாலை வைச்சுக் கனபேர் இப்ப சொத்து சுகத்தை அனுபவிக்கப் போயினம். அவ்வளவுக்குக் காசு வாங்கி இருக்கினமாம் மேசை கதிரையளை இறுக்கிப் பிடிச்சுக் கொண்டிருக்கிறவையள் எண்டு கதை கசியத் துவங்கி இருக்கு.

இதை எல்லாம் கொம்பிளையின் பண்ண வெளிக்கிட்டால் ஆரிட்டைப் போய்ச் சொல்லுறதெண்டு தெரியாமல் கிடக்கு. அங்கை பாத்தால் மைத்திரிக்கு மூளை மாறாட்டமாக் கிடக்கு. நேரம் ஒரு கதையாக் கிடக்கு. எதைச் சொல்லக்கூடாது எண்டு நினைக்கிறமோ? அதைச் சொல்லுறார். எதைச் சொல்ல வேணுமோ அதை மறந்து போயிடுறார். முன்னம் அந்த ஆள் நல்ல மனுசன் மாதிரி வேஷம் போட்டாரோ தெரியாது. சந்திரிகா மகிந்தான்ரை அரசாங்கத்தைக் கவிழ்க்க வெளிக்கிடேக்கை ஆரை வைச்சுக் கவிழ்க்கலாம் எண்டு தேடத்துவங்கேக்கை கன பேரைச் சந்திச்சவவாம். பிறகு கடைசியா மைத்திரியைச் சந்திச்சு அவரை எலக்சனிலை நிக்க வைச்சு ஜனாதிபதியாக்கினவை. அப்ப கூட அவை நினைக்கேல்லை உப்பிடிப் பிரச்சினைப் படுத்துவர் எண்டு. இப்ப மனுசன் தலை கீழா நிக்கிறார் எண்டது ரணிலுக்கும் கொஞ்சம் தலையிடியாத்தானிருக்குது. பிழையோ சரியோ ஒரு பாடா அரசாங்கத்தை நடத்த விடுகிறாரில்லை. எந்த நாளும் ஏதோ ஒரு இடக்கு முடக்கைச் செய்து கொண்டிருக்கிறார். கடைசியா உந்தாள் குடுக்கிற லிஸ்டிலை ஒருத்தரும் மிச்சமில் லைப் போலை கிடக்கு. அவரை நினைக்க எல்லாருக்கும் வயித்தைக் கலக்குது எண்டு சொல்லினம். விடிய எழும்பிப் பல்லுத் தீட்ட முன்னம் மைத்திரி என்னவாம்? மைத்திரி என்ன சொன்னவர்? எண்டு ஆளை ஆள் கேட்டபடியாம்.

அந்த அளவுக்கு ஜனாதிபதி எண்ட பொறுப்பில்லாமல் மனுசன் நடக்கிறார். அது உண்மை போலைத்தான் கிடக்குது. இல்லாட்டி ஒரு இந்து கலாசார அமைச்சரா அந்தச் சமயத்தையே பிழை எண்டு நினைக்கிற ஒரு சோனகரைக் கொண்டு போய் போடுவரே? எட ஒரு விவஸ்தை வேண்டாம். இரண்டும் எதிர் எதிரான சமயம். எப்பவும் இந்து சமயத்தை மட்டுமில்லை தங்கடை சமயத்தை விட மற்ற எல்லாச் சமயத்தையும் பிழை எண்டதுதான் அவையின்ரை கோட்பாடு. அப்ப அந்தச் சமயத்திலை உள்ள ஆளைக் கொண்டு வந்து அமைச்சராக்கினதின்ரை உள் நோக்கம் என்னவா இருக்கும் எண்டது விளங்கிதெல்லே?

ஆனால் அங்கஜனுக்குப் பிரதி சபாநாயகர் பதவி குடுக்கேக்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குறுக்காலை நிண்டதெல்லே. அப்ப அவைக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும் எண்டுதான் அவையளைப் பழி வாங்கத்தான் மைத்திரி மூளையா உதைச் செய்தவர் எண்டும் சொல்லினம். சம்பந்தற்றை கூட்டு ஒட்டு மொத்தத் தமிழ் சனத்தின்ரையோ இல்லாட்டி இந்துக்களின்ரையோ கூட்டு இல்லை எண்டது மைத்திரிக்கு முதலிலை விளங்க வேணும். சம்பந்தரை வேணும் எண்டால் மைத்திரி பழி வாங்கட்டும். அதுக்காக எங்கடை மடீக்கை கை வைச்சதுதான் பிழை எண்டு சொல்ல வாறன்.

காதர் மஸ்தான் காதிலை பூவோடை வாற மாதிரி ஐயர்மார் கனவும் கண்டவையாம். போற போக்கிலை பாத்தால் வேணுமெண்டு ஒரு கந்தசாமியையும், வேல் முருகனையும் முஸ்லிம் சமய விவாகார அமைச்சரா மைத்திரி நியமிக்கேக்கை அவையும் தாடி வளர்த்து, குல்லாவையும் போட்டுக் கொண்டு பள்ளிக்கும் போகவேண்டிவரலாம். உப்பிடி எல்லாம் நடக்குமெண்டுதான் அப்பு வேளைக்கே செத்துப்போனார். நாங்கள் இன்னும் இருந்து அனுபவிக்கிற வேதனையை ஆரிட்டைச் சொல்லி அழ?

**கோளரங்கன்**

---

## புதிய பிராமணர்கள்....

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளி கொடுப்பனவை வாங்கவில்லை.

கிழக்கு மக்களின் உணர்வுகளுக்கு வட மாகாண சபையினர் மதிப்பளிக்காமை வருத்தமளிக்கிறது. வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்கும் சக்திகளின் கரம் மேலோங்கும் அபாயத்தை இவர்கள் புரிந்துகொள்ளவில்லை. கிழக்கில் இருந்து வருகைதந்து மே 18 அன்று வடக்கு - கிழக்கு பேதங்களை ஏற்படுத்த சில சக்திகள் தீவிரமாக முயன்றன. அன்று அவர்களால் சாதிக்க முடியாமல் போனதை இன்று வட மாகாண சபையினர் செயற்படுத்தியுள்ளனர் என்பது வருத்தமளிக்கிறது. இந்த வரலாற்றுப் பழியை சம்பந்தப்பட்டோரே பொறுப்பேற்க வேண்டும்.

மே 18 தொடர்பான உத்தேச நினைவேந்தல் குழு எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாமல் போய்விடுமோ என அஞ்சுகிறோம். அம்பாறை உட்பட வடக்கு - கிழக்கின் 8 மாவட்ட மக்களும் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தனர் என்ற உண்மையை சம்பந்தப்பட்டவர்களுக்கு நினைவூட்டுகிறோம். குறிப்பிட்ட சில வணிக நிறுவனங்களைத் தவிர எமது நிதி சேகரிப்பின்போது ஆதரவளித்த பலரையும் எமக்குத் தெரியாது ஆகவே ஒவ்வொரு ரூபாவாக திருப்பிக் கொடுப்பது சாத்தியமில்லை. எனவே எந்த வழியிலாவது தவராசாவின் பணத்தை மீளக் கையளிக்க வேண்டியேற்பட்டது என்று குறிப்பிட்டனர்.

எப்படியோ தவராசாவின் வீட்டுக்குச் சென்றனர். அங்கு யாராவது வரவேற்றிருந்தால் அவர்களிடம் பணத்தைக் கையளித்திருப்பர். அங்கு யாருமே இல்லை. எனவே 'பாவப்பட்ட பணம்" என்று எழுதப்பட்ட அந்தப் பொதியை கேற்றில் கட்டிவிட்டுத் திரும்பினர்.

சீ.வீ.கே. கட்சி மாறுவார் என்றில்லை. ஆட்சி மாறினால் டக்ளஸ் நிச்சயமாக அமைச்சர். எதிர்காலப் பலன்களை இந்த நிதியைப் பொறுப்பேற்பதன் மூலம் இழந்துவிட அவர் தயாராக இல்லைப் போலுள்ளது.

ஈ.பி.டி.பியுடன் உறவைப் பேணவேண்டிய நிலை சீ.வீ.கேக்கு. இல்லாதுவிட்டால் யாழ். மாநகர சபை உட்பட பல உள்ளூராட்சி சபைகளில் பட்ஜெட் நிறைவேற்ற முடியாமல் போகலாம். அதுதான் முதல் தேவை. வடக்கு - கிழக்கு இணைப்பு, உறவு என்பதெல்லாம் இரண்டாம் பட்சம். விசுவமடு உட்பட வன்னியின் துயிலும் இல்லங்களில் விதைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கிழக்கின் மாவீரர்களை எண்ண அவருக்கு நேரமில்லை என்பதே அவர் சொல்லும் செய்தி. மாகாண சபை கலைக்கப்பட்டாலும் அடுத்த மாகாண சபை தேர்தல் முடியும் வரை தான் பதவியில் இருக்கலாம் என்ற எண்ணத்தினால்தான் முதலமைச்சரின் கோரிக்கையை அவர் புறந்தள்ளியுள்ளார் போலுள்ளது.

முதலமைச்சர் தமது தற்துணிவிலேனும் இந்த நிதியைப் பொறுப்பேற்றிருக்கலாம். ஈ.பி. ஆர்.எல்.எவ்., தமிழரசுக் கட்சி, ரெலோ பரிந்துரைத்த பெயர்களை (சர்வேஸ்வரன், ஆர்னோல்ட், விந்தன் கனகரட்ணம்) நிராகரித்து தற்துணிவில் அமைச்சர்களை நியமித்து தமது ஆளுமையை நிரூபித்தவர் அவர். இந்நிதிப் பொட்டலத்தை தவராசா பொறுப்பேற்கும் வரை எப்படி உரையாற்றக்கூடாது என்பதை நினைவுபடுத்தும் குறியீடாக இது இருந்திருக்கும்.

மகாண சபை கலைக்கப்படும் வரை தவராசா பொறுப்பெடுக்காவிட்டால் ஏதோ ஒரு நிதி என்ற வகையில் நிதியைக் கையாளுபவரிடம் ஒப்படைத்திருக்கலாம். தவறு செய்யாதவர் எவருமில்லை. கடவுளே மனிதப் பிறவி (அவதாரம்) எடுத்து வரும்போது தவறு செய்ததாக இதிகாசங்கள் கூறுகின்றன. இராமன் வாலியை மறைந்திருந்து அம்பை எய்து கொன்றான். கிருஷ்ணன் கர்ணனின் உயிரைப் போக்குவதற்காக அவனது தர்மங்களை எல்லாம் தானமாகப் பெற்றான்.

நிதி கையேற்காமை தொடர்பாக கிழக்கு மக்களிடம் மன்னிப்புக் கோரும் பிரேரணை ஒன்றை மாகாண சபையில் இன மான உணர்வு கொண்ட இருவர் தயாராக உள்ளனரா? (பிரேரிக்க ஒருவர் : ஆமோதிக்க ஒருவர்) அவ்வாறான பிரேரணையைக் கொண்டு வருவோர் வரலாற்றில் வாழ்வர். இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் எதிர்த்து வாக்களிப்போரை எதிர்வரும் தேர்தலில் மக்கள் கவனித்துக் கொள்வர்.

இப்போதே தவராசா தொடர்பாக அவர்கள் ஒரு முடிவுக்கு வந்திருப்பர். தவராசாவைச் சேர்த்துக் கொள்ளும் கட்சியின் நிலைமை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீந்திக் கடந்த நெருப்பாறு 31

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

■ நா.யோகேந்திரநாதன்

போரின் நிலை இப்படித் திசைமாறிவிட மக்களின் நிலையோ பெரும் இக்கட்டுக் குள்ளாகிவிட்டது. போராளிகளின் காவல்நிலைகள் ஊர் எல்லைக்கு நகர்ந்துவிட்டதால் அவர்களுக்கு பெரிய மடுவை நோக்கி இடம்பெயர்வதை விட வேறு வழி தெரியவில்லை.

தம்பனை, சின்னப்பண்டி விரிச்சான், பெரிய பண்டி விரிச்சான் ஆகிய பகுதிகளில் குடியிருந்த மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து மடுக்கோவிலில் தஞ்சமடைந்திருந்தனர். அவர்கள் இராணுவம் பண்டிவிரிச்சானில் இறங்கிவிட்டதை அறிந்ததுமே பெரியமடுவை நோக்கி இடம்பெயர ஆரம்பித்து விட்டனர். 1999இல் 'ரணகோஷ' நடவடிக்கையின்போது அவர்கள் அனுபவித்த கொடூரத்தை எப்படி மறக்க முடியும்?

'ரணகோஷ' நடவடிக்கையின் போது போராளிகள் படையினரை பெரியபண்டிவிரிச்சானில் தடுத்து நிறுத்திப் போரிட்டுக் கொண்டிருந்தனர். படையினரின் எறிகணைகளிலிருந்து உயிர்ப் பாதுகாப்புக் கருதி அன்று பகலே மடுவைச் சுற்றியுள்ள கிராமங்களின் மக்கள் மடுக்கோவிலில் தஞ்சமடைந்தனர். அங்கு குவிந்துவிட்ட பல ஆயிரம் மக்களைச் சமாளிக்க முடியாமல் மடுவளாகம் திண்டாடியது. குருவானவர் செய்தி முடிந்து சில நிமிடங்களில் பறந்துவந்த எறிகணை ஒன்று, சின்னக் கோவிலின் அருகில் நின்ற பாலை மரத்தில் பட்டு வெடித்துச் சிதறியது.

எங்கும் மரண ஓலம். அந்தக் கணத்திலேயே 42 உயிர்கள் பறிக்கப்பட கோவில் கட்டடம் குருதிமயமாகியது. இன்னும் ஏராளமானோர் படுகாயமடைந்து துடிதுடித்தனர். இரவு நேரம், எதுவுமே செய்ய முடியாத நிலை. காயமடையாத சிலர் தங்கள் உடைகளைக் கிழித்து காயங்களுக்குக் கட்டுப் போட்டனர். உயிர் தஞ்சம் கோரி மாதா கோவிலில் அடைக்கலம் கோரிய மக்களின் மீதே எறிகணை வீசி படையினர் தங்கள் கொலைவெறியை நிலைநாட்டினர்.

தட்சணாமருதமடு, பாலம்பிட்டி ஆகிய கிராமங்களின் மக்களும் பெரியமடு நோக்கி, நடந்தும் சைக்கிள்களிலும் உழவு இயந்திரங்களிலும் போக ஆரம்பித்தனர். பாலம்பிட்டியை விட்டு வெளியேறியே ஆக வேண்டும் என்ற நிலை எழுந்தபோது, எதற்கும் கலங்காத பரமசிவம் ஆடியே போய் விட்டார். மிளகாய்த் தோட்டம் காய்த்துக்கொண்டிருந்தது. வீட்டிற்குள்ளும் நாலு மூடைகளில் செத்தல் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. முற்றத்திலும் நிறைய மிளகாய் காய்ந்து கொண்டிருந்தது. மரவள்ளியும் இன்னும் ஒரு மாதத்தில் பிடுங்கவேண்டிய பருவம் வந்துவிடும். எல்லாவற்றையும் விட்டுப்போவதென்றால் அவருக்கு உயிர் போவது போன்ற உணர்வே ஏற்பட்டது.

எனினும் சில நாட்களில் திரும்பிவிடலாம் என்ற ஒரு நம்பிக்கை தோன்றி சிறிது தெம்பைக் கொடுத்தது. ஒரு பெரு மூச்சுடன், "இந்த மிளகாயை அள்ளி வீட்டுக்கை குவி" என்றார் அவர். பார்வதியின் முகமும் இருண்டு போய்க்கிடந்தது. அவள் எதுவுமே பேசாமல் மிளகாயைக் கடகத்தில் அள்ளி வீட்டுக்குள் கொண்டு சென்று கொட்ட ஆரம்பித்தாள். சுந்தரம் மாட்டுக் கொட்டிலுக்குப் போட்டிருந்த தகரங்களையும் தடிகளையும் கழற்றிக் கொண்டிருந்தான்.

பரமசிவம் இரண்டு மூடை நெல்லையும், ஒரு மூடை மிளகாயையும் ஏனைய அவசியமான பொருட்களையும் வண்டிலில் ஏற்றினார். பசுமாட்டையும் கன்றையும் அவிழ்த்துவிட்டார். பின்பு பரமசிவம் அதைத் தடவியவாறு, "எடியே.. நாங்கள் கெதியாய் வந்திடுவம்.. அதுவரையும் கவனமாய் நிண்டு கொள்" என்றபோது அவரின் கண்கள் கலங்கிவிட்டன. பார்வதி வண்டிலில் ஏறி அமர, பரமசிவம் மாடுகளை, "நட... நட" எனத் தட்டி விட்டுப் புறப்படலானார்.

சுந்தரசிவம் சைக்கிளில் சில பொருட்களைக் கட்டிக்கொண்டு புறப்படத் தயாரானான். எனினும் ஒரு முறை தோட்டத்தைப் பார்த்துவிட்டுப் போக வேண்டும் போல் தோன்றவே சைக்கிளை அந்தத் திசையை நோக்கிச் செலுத்தினான். எங்கும் பசுமை படர்ந்து பழமும் பிஞ்சுமாய்க் கிடந்த அந்தத் தோட்டத்தைப் பார்த்தபோது அவனால் கவலையைத் தாங்க முடியவில்லை. மோட்டார் சைக்கிள் ஒன்று வாங்க வேண்டும் என்ற ஆசை, சில மாதங்களில் முத்தம்மாவைத் திருமணம் செய்ய வேண்டும் என்ற கனவு எல்லாமே நிறைவேறாமல் போய்விடுமோ என்ற அச்சம் அவனுள் எழுந்தது.

"இல்லை.. இல்லை.. எப்பிடியும் கெதியாய் திரும்பி வருவம்" எனத் தனக்குள் சொல்லியவாறே சைக்கிளை எடுத்தான்.

பரமசிவம்பிள்ளையின் குடும்பத்தினர் பெரியமடுவுக்கு வந்துசேர நேரம் காலை பதினொரு மணியைத் தாண்டிவிட்டது. பெரியமடுக்குளத்துக்கு அண்மையில் நின்ற ஒரு கிளைவிட்டுப் படர்ந்திருந்த ஒரு பெரிய ஆலமரத்தின் நிழலில் வண்டியை நிறுத்தினார் பரமசிவம். மாடுகளை அவிழ்த்து குளத்தில் தண்ணீர் காட்டிவிட்டு புற்கள் நிறைந்த இடத்தில் மேயக் கொண்டு போய்விட்டார்.

நான்கைந்து ஊர்களின் மக்களை அந்த சிறிய கிராமத்தில் அடக்குவது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை. எனினும் அந்த ஊர் மக்கள் தங்கள் காணிகளில் எல்லோருக்கும் இடம்கொடுத்தனர். ஒவ்வொரு காணிகளிலும் பதினைந்து இருபது குடும்பங்கள் தங்க வேண்டியிருந்தது. பரமசிவத்துக்குத் தெரிந்தவர்கள் பலர் அந்த ஊரில் இருந்தபோதிலும் அவர் எங்குமே போகவிரும்பவில்லை. அந்த ஆலமரமே போதும் என அவருக்குப்பட்டது.

பார்வதி சில பொருட்களை மட்டும் இறக்கி சமையல் வேலையை ஆரம்பித்தாள். அவள் சட்டிபானையைக் கொண்டுபோய்க் குளத்தில் கழுவி விட்டுத் திரும்பிய போது பெருமாள் குடும்பமும் அங்கு வந்துவிட்டனர். பெருமாள் நடந்த களைப்பில் ஒரு ஓரமாய்ப் படுத்துவிட்டார். வேலாயியும் முத்தம்மாவும் சமையலுக்கு உதவி செய்யத் தொடங்கினர். சுந்தரம் விறகு தேடிக் கொண்டுவந்து போட்டான்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய பிராமணர்கள்

■ சுடரவன்




எங்களுடைய வீட்டில் காசு பணம், நகை, புடைவை திருட்டுபோய் விட்டது என்றே மக்கள் பொலிஸில் புகார் செய்வது வழக்கம். என்னுடைய வீட்டுக்கு வந்து எனக்கென்று காசு வைத்து விட்டு போய்விட்டார்கள் என்று முறைப்பாடு செய்துள்ளார் இக்கட்டுரை வெளியாகும் தருணம் வரை வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவராக விளங்கும் சி.தவராசா.

'என்ரை காசைத் தாங்கோ" என்று உரத்த குரலில் இவர் கேட்கும் காட்சி சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது. தவராசாவின் வேண்டுகோளால் முள்ளிவாய்க்கால் உட்பட இறுதிப் போரில் தமது உறவுகளை இழந்த, ஏன் உணர்வுள்ள ஒவ்வொரு தமிழ்மகனுமே அவமானத்தால் கூனிக்குறுகிப் போயினர். உண்மையில் ரோஷ முள்ள - இனமானமுள்ள உறுப்பினர்கள் யாராவது இருந்திருப்பின் தன்னிடம் இல்லாவிட்டாலும் அருகில் உள்ள உறுப்பினரிடமாவது காசு வாங்கி தவராசாவின் மேசை மீது வைத்து விட்டுப் போயிருப்பர் அல்லது முகத்தில் எறிந்திருப்பர். இந்த விடயத்துக்காக சபை ஒழுக்கத்தை மீறியதாக சபை முதல்வர் நடவடிக்கை எடுத்தால்கூடப் பரவாயில்லை.

செங்கோலை தூக்கிக் கொண்டு ஓடுவதை விடவா இது சபை ஒழுக்கக்குறைவு? அப்படிச் செய்திருந்தால் 'தமிழன்டா' என்ற மீம்ஸ் சமூகவலைத்தளங்களில் பறந்திருக்கும். இது உணர்வு ரீதியான விடயம் என சபை உறுப்பினர்கள் நினைக்கவில்லை.

மக்களின் நாடித்துடிப்பை அறிந்து இவர்கள் செயற்படுபவர்கள் போலத் தெரியவில்லை. இவர்களைப் போல இருக்க கிழக்கு மக்கள் தயாராக இல்லை. 'என்ன மனுசன்டா இவன்" என்று வீடுகளில் பெற்றோர் கேட்ட கேள்வி பிள்ளைகளுக்கு உறைத்தது. பலரும் கூடிப் பேசினர். கொடும்பாவி எரித்தால் அது பத்தோடு பதினொராவது செய்தி, கண்டன அறிக்கை விட்டால் தலைப்பைத் தவிர வேறு எதையும் பெரும்பாலும் வாசிக்க மாட்டார்கள். இது அவசர யுகம். எனவே ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் மக்களிடம் உண்டியல் குலுக்கிப் பெற விரும்பினர். நான் தாறேன் ஏழாயிரத்தையும் என்று பலர் கூறினர். எங்களுக்கு ஒரு ரூபாய்தான் வேண்டும் எனக் கூறினர் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள். சரி! யார் மூலம் இதனைத் திருப்பி வழங்குவது?

மே 18 நிகழ்வுகளை கையாள முதல்வர் விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்திடம் ஒப்படைப்பதெனத் தீர்மானித்தனர். தம்மால் சேகரிக்கப்பட்ட நிதியை சம்பந்தப்பட்டவரிடம் கையளிக்குமாறு மின்னஞ்சல் மூலமும் பதிவுத் தபால் மூலமும் தமது கடிதத் தலைப்பில் வேண்டுகோள் விடுத்தனர். அரசியல்வாதிகளும் பத்திரிகை ஆசிரியர்களும் இது காசு விடயம் என்றே பார்த்தனர்.

'எங்கடை காசில திருவிழா செய்யேக்க நாங்கள் வெளியால நிற்கிறதோ...?" என்று கேட்டார் ஒருவர். இது திருவிழாவோ வாண வேடிக்கையோ அல்ல என்று இவர்களுக்கு எப்படிப் புரிய வைப்பது? பாதிக்கப்பட்ட உறவாக இருந்தால், பந்தத்துக்கு முன்னால் போய் நின்று கொளுத்தலாம். அரசியல்வாதிகளுக்கு முடிசூட்டி அழகு பார்க்கும் அரங்கமல்ல இது.

சரி! சேர்த்த காசைக் கொண்டுபோவோம் என மாணவர்கள் நினைத்தனர். தனியே அதைக் கொண்டுபோவதா? பணம் தவராசாவுக்கு. சபை முதல்வரையோ, முதலமைச்சரையோ வெறும் கையுடன் சென்று சந்திப்பதா...? அவர்கள் பெரியவர்கள். கையில் ஏதாவது கொண்டு செல்வதே முறை. கிருஷ்ணனை சந்திக்கச் சென்றார் குசேலர். சிறுபிடி அவலை பொட்டணியாகக் கட்டிக்கொண்டு சென்றதாகக் கதைகள் சொல்கின்றன. இருவருக்கும் தமது சந்திப்பின் பின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு நூலை பரிசளிக்கத் தீர்மானித்தனர். நூல்கள் மட்டக்களப்பைப் பற்றிய தகவல்களை வழங்கக் கூடியதாக இருந்தன.

முறைப்படி அறிவித்தலை வழங்கி விட்டே மாகாண சபைக்குச் சென்றனர் மாணவர்கள். அவர்களைப் பார்க்க விரும்பவில்லை அவைத்தலைவர். இது முடிந்துபோன விவகாரம் என்பது அவரது கருத்து. முதலமைச்சர் வந்தார். அவைத்தலைவரிடம் பேசினார். காரியமாகவில்லை. எனவே இந்த நிதி விடயமாக தவராசாவிடமே போங்கள் என்றொரு வழியைக் காட்டினார் அவர். இதில் முக்கியமான விடயம் வந்தவர்களை மரியாதையாக நடத்தத் தெரியவில்லை. வெளியில் நிற்க வேண்டிய செருப்பாகக் கணித்தனர். வெற்றி முரசு எனும் இணையத்தளம் 'உணர்வுகள் புரியாவிட்டாலும் மனிதர்களை மதிக்கத் தெரியவேண்டும்' எனக் குறிப்பிட்டது.

முதன்முதலாக அமைக்கப் பட்டது இந்த மாகாண சபை இதற்காக தமிழ்த் தேசியம் தோற்கடிக்கப்படக்கூடாது என்பதற்காக தனது நண்பருடன் சேர்ந்து சீ.வீ.கே. சிவஞானத்தின் வெற்றிக்காக உழைத்த மாணவர் ஒருவரும் அங்கிருந்து வந்த மூவரில் அடங்கியிருந்தார்.

இன்று அவரின் முகம் சீ.வீ. கேக்கும் மறந்திருக்கும் ஆனபடியால் பெயர் தேவையில்லை. இப்போது நினைவில் இருப்பது டக்ளஸ், தவராசா போன்ற புதிய பிராமண முகங்களே. தவராசாவின் வீடும் தெரியாது, கொழும்புக்கு போய்விட்டதாகவும் தகவல். இவர் திரும்பி வரும்வரை காத்திருக்க முடியாது. ஏற்கனவே நிதி சேகரிப்பு தொடர்பாக சில விரிவுரைகளுக்குச் செல்லவில்லை. இந்தத் தவராசாவுக்காக பெற்றோரின் கனவில் மண்ணை அள்ளிப் போட இயலாது.

ஒரு அறிக்கை தயார் செய்யப்பட்டது. அதில் 'வடக்கில் பாரம்பரியமாக உள்ள சாதி அமைப்புக்குப் புறம்பாக புதியதொரு உயர் சாதி அமைப்பு ஒன்று உருவாகியுள்ளது போல உள்ளது. அரசியல்வாதிகள் என்னதான் தங்களுக்குள் அடித்துக் கொண்டாலும், ஒருவர் தவறு செய்தால் மற்றவர் அதனை நியாயப்படுத்தும் அல்லது பூசி மெழுகும் போக்கு வெளிப்படுகிறது.

தவராசாவின் கட்சி யாழ். மாநகர சபையை ஆட்சி புரிந்தபோது முள்ளிவாய்க்கால் உட்பட இறுதிப்போரில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் பிரேரணை கொண்டுவரப்பட்டது. அங்கு கொல்லப்பட்ட அனைவரும் புலிகளே என்ற நிலைப்பாட்டில் இருந்த மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அப்பிரேரணைக்கு அனுமதி மறுத்தார். அரசின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக அக்கட்சியின் செயலர் ஜெனிவா வரை சென்றார். இனப்படு கொலை என்ற ஐ.நாவின் குற்றச்சாட்டை மறுதலித்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டங்களையும் அக்கட்சி ஏற்பாடு செய்தது. இதன் தொடர்ச்சியாகவே தனது பங்கு நிதியைத் திருப்பித் தரக் கேட்டார். அவர் தனது தவறை உணரவும் இல்லை. நியாயப்படுத்தும் விதமாகவே அவது நிலைப்பாடு உள்ளது. அவரைக் காப்பாற்ற கட்சி பேதமின்றி அரசியல்வாதிகள் செயற்படுகிறார்கள் போல உள்ளது.

பொதுவாழ்வில் ஈடுபடுபவர்கள் மக்களின் உணர்வைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களின் மனதில் உள்ள வடுக்களைக் கீறிப் பார்க்கக்கூடாது. செருப்புத் தைப்பவர், சந்தை வணிகர், பிரயாணிகள், பல்கலைக்கழக சமூகத்தினர், முஸ்லிம் பொதுமக்கள் உட்படப் பல தரப்பினர் இந்நிதி சேகரிக்கும்போது பங்களித்திருந்தனர். இந்தக் காசைத் திருப்பிக் கொடுப்பதற்காக தைத்துத் தந்த பைக்குக்கூட அந்தத்

(19ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சு பல்கலைக்கழக மாணவர்களும் நாமும்

பின்பற்றப்பட
வேண்டிய
முன்னுதாரணம்
16



தனது உறவுகளைத் தேடிச் சென்று சொந்தம் கொண்டாடுகின்ற பழக்க, வழக்கங்களை மறந்து கொண்டிருக்கின்ற இன்றைய சமூகத்தில், தமக்குத் தொடர்பில்லாதவர்களைத் தேடிச் சென்று அவர்களோடு தமது காலத்தையும், நேரத்தையும் செலவு செய்து அவர்களை ஆசுவாசப்படுத்தி அவர்களைச் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும் என்று எண்ணுவதை என்னென்று சொல்வது?

தினம் தினம் நாமும்தான் பல வயோதிபர்களையும், வயோதிப மடங்களையும், அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்களையும், சிறுவர் இல்லங்களையும் கடந்து செல்கிறோம். ஏன் எம்மனதில் அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலோ இல்லை. அவர்களோடு பேசவேண்டும் என்ற துடிப்போ ஏற்படுவதில்லை. அவர்களோடு சில கண நேரமாவது இணைந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதில்லை? அதற்குக் காரணமாகப் பலவற்றைச் சொன்னாலும், எம் மனதில் ஈரம் இல்லையா? இல்லாவிடில் நாங்கள் என்ன மனித நேயம் குன்றியவர்களா? என்ற கேள்விகளும் எமக்குள் எழாமலில்லை.

போரின் வடுக்களிலிருந்து மீளத் துடிக்கும் இளம் வயதினர்களைச் சந்தித்து அவர்களோடு கலந்து உறவாடி அவர்களைச் சந்தோஷப் படுத்தி அவர்கள் முகத்திலே புன்னகையைக் காணவேண்டும் என ஆர்வப்படுவதுவும் ஒரு சந்தோஷமே. இப்படியான ஒரு ஆர்வம் மேலிட தங்களால் பிறரின் கண்ணீரைத் துடைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பிரான்ஸ் தேசத்திலிருந்து இலங்கையை நோக்கி மனித சேவைக்காக வந்திருக்கின்ற மாணவர்கள் பற்றிய செய்திகள் இணையங்களை நிரப்பிக் கொண்டிருக்கின்றன.

பிரான்ஸ் பல்கலைக் கழகப் பொறியியல்பீட மாணவர்களான அவர்கள் தற்போது இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலேயே தமது மனித நேயப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் IOSF (Isnstitu D optique sans frontieres) என்ற மனித நேய அமைப்பை உருவாக்கியே சேவைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்த மாணவர்கள் குழுவில் இரண்டு இலங்கை தேசத்து உறவுகளும் அங்கம் வகிக்கின்றனர்.

கிளிநொச்சியிலுள்ள மகாதேவா சிறுவர் இல்லத்திலும், முல்லைத் தீவிலுள்ள இனிய வாழ்வு இல்லத்திலும், வவுனியாவிலும் மற்றும் மட்டக்களப்பிலும் தமது சேவைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் பல்கலைக் கழக மாணவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து மேற்கொண்ட பல்வேறு செயற்றிட்டங்களினூடாகவும், அங்கீகரிக்கப்பட்ட இணையத்தள நிதி சேகரிப்புத் தளத்தினூடாகவும் நன்கொடையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணத்திலேயே இவ்வாறான பணிகளை முன்னெடுத்துவருகின்றனர்.

ஆனால் தமது பயணச்சீட்டுகள் மற்றும் தங்குமிட வசதிகள், உணவு உள்ளிட்ட பலவாறான பிற தேவைகளைத் தாமே பொறுப் பேற்றுக் கொண்டு இந்த செயற் திட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இந்தச் செயற்றிட்டங்களினூடாக அவர்கள் எமது சமூகத்திற்குச் சொல்ல வருவது என்ன? உங்களுக்கு அருகாமையில் அன்புக்காகவும், பரிவுக்காகவும் ஒரு சமூகம் ஏங்கிக்கொண்டு இருப்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் நிறைவோடு உறங்கும்போது ஒரு சமூகம் நிறைவற்ற மனதோடு விழித்திருந்து எதையோ ஒன்றுக்காய் காத்துக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரிகிறதா? போர் நடைபெற்றதற்குரிய பொறுப்பை ஒரு சாரார் ஏற்றுக் கொள்ள, எதுவுமே நடைபெறவில்லை என்பது போல நீங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்களா? எனப் பல கேள்விகளை மௌனமாகக் கேட்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.


அந்த மாணவர்கள் மௌனமாகத் தமது பணிகளை முன்னெடுத்த வண்ணமிருக்கின்றனர். அந்த மாணவர் குழாம் இங்கிருக்கின்ற ஒவ்வொரு கணமும் அவர்கள் எமது சமூகத்தை நோக்கிப் பல கேள்விகளை எழுப்பிக் கொண்டிருப்பார்கள். ஒரு பொறுப்புள்ள மனிதர்கள் செயல்களால்தான் பிறரோடு பேசுவார்கள். செயலால்தான் பிறரைத் தண்டிப்பார்கள்.

அவர்களைப் பார்த்து இனியாவது நாம் திருந்தலாமே? அதற்காக அவர்களைப் போன்ற மனிதர்கள் எமது சமூகத்தில் இல்லாமலில்லை. அத்தகையோர் தம்மாலானவற்றைச் சமூகத்துக்குச் செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் செயற்றிறன் போதாது ஏனெனில், ஒன்றல்ல இரண்டல்ல ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு மேலாக நாம் துயர் தோய்ந்த ரணகளம்மிக்க நடவடிக்கைகளுக்கு ஏ்ளால் பயணித்துக் கொண்டிருந்தவர்கள். அந்தக் கணங்களிலிருந்து விடுபட எத்தனை வருடங்கள் எமக்குத் தேவை? எனவே எல்லோரும் இணைந்து பணியாற்றினால் மட்டுமே சமூகத்தின் துயரைத் துடைக்கலாம். எனவே அந்த பிரான்ஸ் நாட்டு மாணவர்கள் போல அதிக பொறுப்பைக் கையிலெடுப்போம். எமது சமூகம் ஒளிபெறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமுத்திரக்கனி - சசிக்குமார் இணைவில் பெருவெற்றி பெற்ற படம் 'நாடோடிகள்'. இதன் இரண்டாம் பாகத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துவிட்டது.

இந்நிலையில் 'நாடோடிகள்' 3 ஆம் பாகத்தையும் தயாரிக்கவுள்ளேன் என சமுத்திரக்கனி தனது சமூகவலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

...தில்
...' படத்தின்
...பாவும் சாய்
...ப்படம்

...பல்வாதிகள் போல
...இது அரசியல்
...ஆர்வமும்



...டங்களில் நடிக்கும்
...ல் இயக்கத்தில்

...ரியாக பிரபுதேவா
...ாடியாக நிவேதா
...இவர்களுடன்
..., சுரேஷ் மேனன்
...னர்.



பொலிவூட்டில் ஓய்வின்றி நடித்துக் கொண்டிருக்கிறார் தீபிகா படுகோன். இவருக்கு இப்போது தயாரிப்பில் ஆசை வந்துவிட்டது.

"இது எனது நீண்டநாள் கனவு. நல்ல படங்களைத் தயாரித்து ரசிகர்களை சந்தோசப்படுத்த முடிவு செய்துள்ளேன்" என்கிறார் தீபிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதங்கம்



உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பிரேசில் தனது முதலாவது போட்டியை நாளை (17.06.2018) சுவிற்சர்லாந்து அணியுடன் விளையாடவுள்ளது. இம்முறை கிண்ணம் வெல்லும் அணிகளில் ஒன்றாக பிரேசிலும் கருதப்படுகின்றது. ஆனாலும் முழங்கால் காயத்தினால் டானி அல்வெஸ் அணியில் இருந்தே நீக்கப்பட்டுள்ளார். அதுபோல கணுக்கால் காயத்தினால் அவதிப்பட்ட நெய்மர் அதிலிருந்து மீண்டு குரோஷியா அணியுடனான பயிற்சி ஆட்டத்தில் விளையாடி கோல் அடித்தமை ரசிகர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியும் இருந்தது.

இந்நிலையில் உதைபந்தாட்ட ஜாம்பவானும் பிரேசில் அணியின் முன்னாள் வீரருமான பீலே சில தினங்களுக்கு முன்னர் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். "பிரேசில் அணியின் பயிற்சியாளரான ரைற்றின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. ஆனாலும் எனக்கு ஒரு விடயம் மட்டும் தான் கவலையாக உள்ளது. உலகக் கிண்ணப் போட்டிகள் தொடங்குவதற்கு இன்னும் சில தினங்களே உள்ள நிலையில் எங்களுக்கு இன்னும் சரியான அணி இல்லை. தனிப்பட்ட ரீதியில் வீரர்கள் சிறப்பான நிலையிலேயே உள்ளார்கள். ஆனாலும் நாங்கள் ஓர் அணியாக இல்லை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு "நெய்மர் உலகின் சிறந்த வீரர்களில் ஒருவராக இருக்கின்றார். இன்று அவர் முதிர்ச்சியும் அடைந்துள்ளார். அவருக்கு அதிக அனுபவமும் உள்ளது. ஆனால் அவரால் மட்டும் உலகக் கிண்ணத்தை வெல்ல முடியாது. அது அணியாலேயே முடியும்" எனவும் கூறியுள்ளார்.

கடந்த உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் நெய்மர் இல்லாத பிரேசில் அணி ஜேர்மனியிடம் 7 : 1 என்று அடைந்த தோல்வியைக் கருத்திற்கொண்டும் பீலே தனது ஆதங்கத்தை முன்வைத்திருப்பார் எனத் தோன்றுகிறது. ஆனாலும் அந்தத் தோல்வியில் இருந்து நிச்சயம் பாடம் கற்றிருக்கும் பிரேசில் இம்முறை அதற்குத் தகுந்த வியூகங்களோடு களமிறங்கி இருக்குமென நம்பலாம்.

# நூறு கோடி




2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐ.பி.எல். போட்டி இந்தாண்டு வெற்றிகரமாக 11 ஆவது வருடத்தை நிறைவு செய்துள்ளது. இந்நிலையில் கடந்த வாரம் Inside Sport இணையத் தளம் வெளியிட்ட அறிக்கையின்படி இரண்டு வீரர்கள் இதுவரை நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். போட்டிகளில் சம்பளமாக மட்டும் 100 கோடி இந்திய ரூபாயை சம்பாதித்துள்ளமை தெரியவந்துள்ளது.

அவர்கள் வேறு யாருமல்ல. சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவரான டோனியும் மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவரான ரோகித் சர்மாவுமே. முதல் எட்டு வருடங்கள் சென்னை அணிக்காக விளையாடிய டோனி சூதாட்டப் பிரச்சினையால் இரண்டு வருடங்கள் புனே சுப்பர் கியன்ற்ஸ் அணிக்காக விளையாடி மறுபடி இந்த வருடம் சென்னை அணிக்காக விளையாடி இருந்தார். 2008 ஆம் ஆண்டு 6 கோடிக்கு சென்னை அணியால் வாங்கப்பட்ட டோனி இம்முறை 15 கோடி சம்பளமாகப் பெற்றுள்ளார். அந்த வகையில் இந்த இரண்டு அணிகளின் சார்பில் டோனி இந்திய ரூபாயில் 107.8 கோடிகளைச் சம்பாதித்துள்ளார்.

அதுபோல ஐ.பி.எல். தொடரின் முதல் மூன்று ஆண்டுகளும் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்காக விளையாடிய ரோகித் சர்மா 2011 ஆம் ஆண்டில் இருந்து மும்பை இண்டியன்ஸ் அணிக்காக விளையாடி வருகின்றார். 2008 ஆம் ஆண்டு டெக்கான் சார்ஜர்ஸ் அணியால் 3 கோடிக்கு வாங்கப்பட்ட ரோகித் சர்மா இந்தவருடம் மும்பை இந்தியன்ஸ் அணி வீரராகப் பெற்றுக்கொண்ட சம்பளம் 15 கோடி. அந்தவகையில் இந்த இரண்டு அணிகளின் சார்பில் ரோகித் சர்மா இந்திய ரூபாயில் 101.6 கோடிகளைச் சம்பாதித்துள்ளார். ஐ.பி.எல். போட்டிகளில் மூன்றுமுறை கிண்ணம் வென்று சாதனை படைத்த இவ்விரு அணித்தலைவர்களும் 100 கோடிகளைச் சம்பாதித்ததிலும் தற்போது சாதனை படைத்துள்ளார்கள்.

# திறமைக்கேது வயது?



இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் ஒரு அணிக்கு 23 வீரர்கள் வீதம் 32 அணிகளில் மொத்தம் 736 வீரர்கள் பங்குபற்றி வருகின்றார்கள். இவற்றில் எகிப்து நாட்டைச் சேர்ந்த 45 வயது கோல்காப்பாளரான எஸாம் அல் ஹாடரியே அதிகூடிய வயதில் விளையாடும் வீரராவார். அதுபோல 1990 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளுக்குப் பின்னர் 19 வயதுடைய வீரர்கள் விளையாடுவதும் இதுவே முதன்முறையாகும்.

அந்தவகையில் 19 வயதுடைய 7 வீரர்கள் இம்முறை போட்டிகளில் விளையாடி வருகின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் விளையாடும் 11 பேரில் இடம் கிடைக்குமா என்பதும் அல்லது மாற்று வீரர்களாகவாவது களமிறக்கப்படுவார்களா என்பதும் சந்தேகமாக இருந்தாலும் உலகக் கிண்ண அணியில் அவர்கள் இடம்பெற்றதே ஒரு சாதனையாகும். அவ்வீரர்களின் விவரம் வருமாறு:-

| பெயர் | நாடு | நிலை |
|---|---|---|
| அலெக்சாண்டர் ஆர்னோல்ட் | இங்கிலாந்து | டிபென்டர் |
| மௌஸா வாக் | செனகல் | டிபென்டர் |
| அச்ரவ் ஹக்கிமி | மொராக்கோ | டிபென்டர் |
| ஜோஸ் லூயிஷ் றொட்றிக்ஸ் | பனாமா | மிட் பீல்டர் |
| பிரான்ஸிஸ் உவோகோ | நைஜீரியா | கோல் கீப்பர் |
| டானியல் அர்ஷானி | அவுஸ்ரேலியா | மிட் பீல்டர் |
| கைலன் மாப்பே | பிரான்ஸ் | போவேர்ட் |

# மாற்றமில்லை





தற்போது நடைபெற்று வரும் உலகக் கிண்ணப் போட்டிகளில் பிரான்ஸின் பயிற்சியாளராக விளங்குபவர் 1998 ஆம் ஆண்டு பிரான்ஸ் உலகக் கிண்ணம் வென்றபோது அணியின் தலைவராக விளங்கிய டெஸ் சாம்ஸ் ஆவார். அதே சமயம் பிரான்ஸ் முன்னாள் வீரரான சினெடின் சிடேன் றியல் மட்ரின் முகாமையாளராக விளங்கி இருந்தார். ஆனாலும் சம்பியன்ஸ் லீக் கிண்ணம் முடிந்தவுடன் அப்பதவியில் இருந்து அவர் விலகி இருந்தார். இதைத் தொடர்ந்து சிடேன் பிரான்ஸ் தேசிய அணிக்குப் பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் என ஊகங்கள் வெளியிடப்பட்டிருந்தன. ஆனாலும் தற்போது அதை மறுத்துள்ள பிரான்ஸ் உதைபந்தாட்டச் சம்மேளனம் பயிற்சியாளராக டெஸ் சாம்ஸ் 2020 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதால் சிடேன் அந்தப் பதவிக்கு தற்சமயம் வரமுடியாது என்பதை வெளிப்படையாகவே அறிவித்துள்ளது.

ஆனாலும் டெஸ்சாம்ஸின் பயிற்சியின் கீழ் 2016 ஆம் ஆண்டு யூரோ கிண்ண இறுதிப் போட்டியில் போர்த்துக்கலிடம் தோல்வி அடைந்த பிரான்ஸ் கிண்ணத்தை தவறவிட்டி ருந்தது.

அந்தவகையில் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளிலும் பிரான்ஸ் கிண்ணம் வெல்லத்தவறும் பட்சத்தில் பயிற்சியாளர் குறித்த முடிவை மீள்பரிசீலனை செய்யவும் பிரான்ஸ் உதைபந்தாட்டச் சம்மேளனம் தவறாது என்பதனால் எதிர்காலத்தில் சிடேனுக்கான வாய்ப்பு கிடைக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 16.06.2018 ... திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.